Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

G. M. K.
COMMUNICATION
302, Temple Rd, Nallur, Jaffna.
TP:- 021-2223760 FAX:- 021-4591194
♥ IDD ♥ LOCAL ♥ NET 2 PHONE (7/=)
♥ FAX ♥ PHONE CARDS ♥ COMPUTER WORKS
♥ AIR TICKETING ♥ BUS BOOKING

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி - 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 17 (30.12.2004) வியாழக்கிழமை இதழ்: 91

# துயரத்தில் துடிக்கும் மக்களுக்கு தேசியத் தலைவர் அனுதாபம்!

## உலகநாடுகளை உதவுமாறும் அழைப்பு



(கிளிநொச்சி)

இயற்கையின் அழிவிலிருந்து இரத்த உறவுகளையும், அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து ஆற்றமுடியாத துயரத்திலும், வேதனையிலும் துடிக்கின்ற மக்களுக்கு அன்பையும், ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவித்துள்ள தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் –

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தாராளமாக உதவுமாறு உலகநாடுகளையும், ஐ.நாவின் அமைப்புக்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிட்ட அறிக்கையில் மேலும் –

எனது அன்புக்கும், மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று எமது தாயக தேசம் என்றுமில்லாத பேரழிவைச் சந்தித்துப் பெரும் துயரில் மூழ்கிப்போய் நிற்கிறது. ஒரு சில நாட்களுக்கு முன்னர் எவருமே எதிர்பாராத தருணத்தில், திடீரெனச் சீறியெழுந்த நிலவதிர்வுப் பேரலைகள் தென்னாசியப் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகளை மூர்க்கமாகத் தாக்கின.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சேதமுற்ற கடற்படைத் தளங்களுக்கு தயா சந்தகிரி நேற்று நேரில் விஜயம்!

காலி கடற்படைத் தள இறங்குதுறை அருகே நீரில் மூழ்கிய நிலையில் பராக்கிரமபாகு போர்க் கப்பல்



(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் அழிவடைந்த தென்பகுதி கடற்படைத் தளங்களுக்கு, கடற்படைத் தளபதியும் கூட்டு நடவடிக்கைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்று விஜயம் செய்து தளங்களை மீளமைப்பது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

கூட்டுப்படைத் தலைமையக சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் கடற்படை சிரேஷ்ட அதிகாரிகள் சகிதமாக அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தளங்களுக்கு அவர் விஜயம் செய்தார்.

இவர் பாதிக்கப்பட்ட இராணுவத் தளங்கள் மற்றும் முகாம்கள் குறிப்பாக கடற்படையின் தக்ஷின, றுகுணு, கிரிந்த கடற்படைப் பிரிவு ஆகிய தளங்களுக்கும் விஜயம் செய்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண புனர்வாழ்வுக் குழுவில் பங்கேற்க புலிகளுக்கு அழைப்பு

## கண்காணிப்புக்குழு ஊடாகக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்பூகம்பத்தால் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்குவதற்கும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குமான தேசிய மட்டக் குழுவில் விடுதலைப் புலிகளையும் பங்கேற்குமாறு அழைப்பு விடப்பட்டிருப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ் குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் - யாழ். மாவட்ட அரச அதிகாரிகள், பொது அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோரை யாழ் செயலகத்தில் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவதும் ஒழுங்குபடுத்துவதும் நீண்ட திட்டத்தைக் கொண்டது. இந்தத் திட்டத்தில் தான் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

மாவட்ட ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவில் விடுதலைப புலிகளின் உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் போன்றோர் இடம்பெறவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களால் கேட்கப்பட்டுள்ளது.

ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் தேசிய ரீதியில் அமைக்கப்படவுள்ள குழுவில் அங்கத்துவம் வகிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 22376 சடலங்கள் இதுவரை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நாடு முழுவதும் 22 ஆயிரத்து 376 பேர் உயிரிழந்திருப்பதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்றுமாலை சமூகசேவைகள் அமைச்சு வெளியிட்ட தகவல்களின்படி - 22376 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

இதில் கொழும்பில் 34 பேர், கம்பஹாவில் 7 பேர், காலியில் 3455 பேர், மாத்தறையில் 750 பேர், அம்பாந்தோட்டையில் 4500 பேர், அம்பாறையில் 7911 பேர், மட்டக்களப்பில் 1439 பேர், முல்லைத்தீவில் 1000 பேர், திருகோணமலையில் 814 பேர், யாழ்ப்பாணத்தில் 2076 பேர், புத்தளத்தில் 4 பேர், வவுனி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டம்!

(கொழும்பு)

இலங்கையில் பூமியதிர்வை முன்கூட்டியே தெரிவிக்கும் எச்சரிக்கை நிலையமொன்றை அமெரிக்க மற்றும் பிரான்ஸ் நாடுகளின் துணையுடன் அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்னாசியாவுக்கான இந்த நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தை ஜனவரி மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டில் அவர் முன்வைக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக கொழும்பு வந்துள்ள பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கல் பானியர் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து கலந்துரையாடிய வேளையில் இலங்கையில் இந்த எச்சரிக்கை நிலையமொன்றை அமைப்பது தொடர்பாகத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி - இது தொடர்பாக ஏனைய தென்னாசிய தலைவர்களுடன் கலந்துரையாடி ஒரு பொதுவான இடத்தைத் தெரிவுசெய்த பின்னர் அறிவிப்பதாகத் தெரிவித்தார். இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் - தனது கொழும்பு விஜயத்தை முடித்துக்கொண்டு பாரிஸ் சென்றவுடன், பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இந்த பிராந்தியத்துக்கு உதவிகளை வழங்குமாறு பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய யூனியன் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவுள்ளதாகக் கூறினார்.

## அரச ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து!

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள் அனைவரதும் விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் :

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக சேவையாற்ற வேண்டிய தேவை உள்ளதால் வடக்கு - கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் உடனடியாக செயற்படுமாறு ரத்துச்செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை தங்களது கடமை நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் பணித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.**

# அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு

# அவசர உளநல முதலுதவிச் சிகிச்சை

## தயா சோமசுந்தரம் தலைமையில் குழு அமைப்பு

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உளநலச்சிகிச்சை அளிக்கப்படவிருக்கின்றது.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உளநலம் சார் உதவித் திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கென யாழ்.மாவட்டத்தில் உளநலத் துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வளஆளணியினரை உள்ளடக்கியதான "அனர்த்த உளநலப் பணிக்குழு" (Mental health task force in disaster) என்ற அமைப்பு உள மருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் தயா.சோமசுந்தரம் தலைமையில் நேற்று உருவாக்கப் பட்டது.

பாதிப்படைந்த மக்களுக்கு அவசர உளநல முதலுதவிகளை வழங்குவதற்கும் ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிச் செயற்பாடுகளில் உள நலம் சார் உதவித்திட்டங்களை இணைக்கவுமே இவ்வமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பிரச்சினையினால் பாதிப்படைந்த மக்களுக்கு நீண்டகாலத் திட்டங்களைத் தூரநோக்கில் அமுல்படுத்தவும் இவ்வமைப்பு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது என இதன் தலைவர் பேராசிரியர் தயா சோம சுந்தரம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உளநலத் துறை மற்றும் சமூகப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று சாந்தியகம் உளவளத் துணை நிலையத்தில் கலந்துகொண்ட "திட்ட உருவாக்கல் ஒன்று கூடலிலேயே" இவ்வமைப்பு அங்குராப் பணம் செய்துவைக்கப்பட்டது.

அனர்த்த உதவிகளை மேற்கொண்டுவரும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தாம் பணியாற்றும் பகுதிகளில் உளநலத்துறை சார் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக 021 - 222 3338 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இது தொடர்பான தகவல்கள், உதவிகளைப் பெற்றுக கொள்ளுமாறும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் செயற்திட்டங்களை யாழ்.மாவட்டத்தில் மட்டுமன்றி ஏனைய தாயகப் பிரதேசங்களிலும் முன்னெடுக்க ஆயத்தமாக இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத்துறை மாணவர்கள் அனைவரும் இன்று காலை 8.00 மணிக்கு - கடற்கொந்தளிப்பால்' பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்காக மருத்துவ உபகரணங்களுடன் சித்த மருத்துவத்துறை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

### உதவிப் பொருட்களை வழங்கக் கோரிக்கை!

கடற்கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக உள்ளவர்களுக்கு வழங்க வசதியாக தங்களால் இயன்ற பொருள் பணம் உலர்உணவு ஆகியவற்றை இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி முன்றலில் கூடி வழங்குமாறு ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கல்லூரி நிர்வாகம் கோரியுள்ளது.

### கலந்துரையாடல்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக மாணவர்கள், உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் அனைவரும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுமுகமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நாளைமறுதினம் காலை 9.00 மணிக்கு கழகத்தின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

### அவசர கூட்டம்

கடல்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து ஆராயும் அவசர கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பெரியபுலம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு வித்தியாலயத்தின் ஆசிரியர்கள் மற்றும் தரம் 10 முதல் 13 வரையான மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வித்தியாலயத்தின் முதல்வர் க.கனகசிங்கம் தெரிவித்தார்.

### கடல் அலையில் சிக்கிய சிறுவனை காணவில்லை

கடற் கொந்தளிப்பின்போது தாயின் கையிலிருந்த 6 வயதுச் சிறுவனை அலை பறித்துக்கொண்டு சென்ற சம்பவம் உடுத்துறை ஆழியவளையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் தும்பளை முருகன் கோவிலைச் சேர்ந்த ஜெகன - கிருபாகரன் (வயது 06) என்ற சிறுவனே அலையில் அகப் பட்டவனாவான்.

இந்தச் சிறுவன் இறுதியாக மஞ்சள் நிறக் காற்கட்டையும் சிவப்பு நிற ரிசேட்டும் அணிந்துள்ளதாகவும், இந்தச் சிறுவனின் தலையில் 08 தையல் போட்ட காயம் இருப்பதாகவும், இச்சிறுவனைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் தமக்கு அறிவிக்குமாறும் பெற்றோர் கேட்டுக் கொண்டுள்ளனர். (12)

### பாராட்டு விழாவும் பிரிவுபசாரநிகழ்வும்

நல்லூர் பிரதேச சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்று செல்லும் ஊழியர்களின் சேவையை பாராட்டி பாராட்டு விழாவும், பிரிவுபசார நிகழ்வும் நல்லூர் பிரதேசசபை நலன்புரிச் சங்கத்தினின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் இ.இராஜதுரை திருமதி எஸ்.கோபிநாத், என்.இராஜமுகுந்தன், எஸ்.தயாபரன், கே.யசோதா, ரி.ஸ்ரீரஞ்சினி ஆகியோரே பாராட்டி கௌரவிக்கிறோம்.

### தேசிய எழுச்சிப்பேரவையின் அவசர கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் அவசரக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்திற்கு மாவட்ட உறுப்பினர்கள், வலய, பிரதேச கிளைகளின் செயலாளர்கள், பொருளாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் கேட்டுள்ளார்.

### மேலும் மூவரின் சடலம் மீட்பு!

வடமராட்சி கிழக்கில் மணல் காட்டுப் பகுதியில் மேலும் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டு புதைக்கப் பட்டன.

மணல்காடு, குடத்தனை பகுதியில் பெண்ணொருவரின் சடலமொன்றும், ஆணொருவரின் சடலம் ஒன்றும் உருக்குலைந்து அழுகிய நிலையில் இன்னொரு சடலமும் மீட்கப்பட்டது.

உருக்குலைந்திருந்தவர் தும்பளை கிழக்கைச் சேர்ந்த விஜயகுமார் மேரி ஆன் (வயது 23) என்பவரது சடலமே அடையாளம் காணப் பட்டது. (12)

### பயிற்சி வகுப்புக்கள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

அரசசேவை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டு வரும் இலங்கை நிர்வாகசேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள், நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக - தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் வகுப்புக்கள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என சங்க செயலாளர் ஜி.பற்குணராசா தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னையா கிருஸ்ணம்மா (கிட்டு)

திருமதி பொன்னையா கிருஸ்ணம்மா அவர்கள் நேற்று (29.12.2004) காலமானார். அன்னார் காலம்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலம்சென்ற பாலுப்பத்தரின் அன்பு மகளும், முத்துச்சாமியின் அன்புத் தாயாரும் லதாவின் அன்பு மாமியாரும், ரூபிலா, கஜரூபன், கிருஸ்யப் பிரபு ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 30.12.2004 இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக 4.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.முத்துச்சாமி
[முருகா] மகன

106. ஆடியபாதம் வீதி.
கொக்குவில் கிழக்கு. கொக்குவில். (1014)


**D.C.A**

மக்கள் வங்கி அருகில், ஸ்ரான்லி றோட், யாழ்.நகர்.

**A/L 2007**
**கலைப்பிரிவு**

| | |
|---|---|
| இ.நா.: சிவமகாலிங்கம் | புவியியல் : கிரிதரன் |
| தமிழ்: கருணா, பாலமுரளி | அரசறிவியல் : பொன்சந்துரு |
| அளவையியல் : ஜெயசுரேஸ் | நாடகம் : சந்திரன் |

**ஆரம்பம்: 01.01.2005 சனி காலை 8.00**

அனுமதிகள் அன்றையதினமே
புதிய கல்வியை புதியஆண்டில்
நல்லநேரத்தில் ஆரம்பிப்போம்
(1012)


## முக்கிய அறிவித்தல்

### வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடுதல்

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறவிருந்த வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை உரிமையாளர்கள்,நெறியாளர் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| கி. பாஸ்கரன் | க. சி. மணியம் |
| வ.பி.பா.ஊ.கூ.சங்கம் | வ.பி.பா.ஊ.கூ.சங்கம் |
| பரந்தன், | பரந்தன், |
| கிளிநொச்சி | கிளிநொச்சி. |

## இலங்கை வங்கி அறிவித்தல்

BOC

இலங்கை வங்கியின் சகல கிளைகளும் வருட இறுதித்தினமான 31-12-2004 வெள்ளிக்கிழமை மட்டுப் படுத்தப்பட்ட வங்கிச் சேவைகளை வழங்கு முகமாக காலை 9 மணிமுதல் 10 மணி வரையுமே வங்கி அலுவல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதனையும்

அன்றையதினம் மற்றைய வங்கிக ளுடான காசோலைத் தீர்வைகள் நடைபெறமாட் டாது என்பதனையும் எமது அன்பார்ந்த வாடிக்கையாளப் பெருமக்களுக்கு அறியத்தருகிறோம்.

உதவிப் பொது முகாமையாளர்
அலுவலகம்
யாழ்ப்பாணம்
30-12-2004 (C/3577)

உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்)


வர்த்தகப் பெருமக்களே!
ஆசிரியப் பெருந்தகைகளே!
மாணவ மணிகளே!
எங்கள் 46 ஆம் வருட அகவையை முன்னிட்டு




புத்தகங்களுக்கு 20 வீதம் தொடக்கம் 70 வீதம் வரையும், உபகரணங்களுக்கு 10 வீதம் கழிவும் வழங்கப்படும். இந்தியப் புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20 வீதம் கழிவும் வழங்கப்படும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.2225542
(C/3500)



**சிறு விளம்பரம்**

**வீடு வாடகைக்கு**

சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு - 7, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டுக்குளி
T.P - 021 222 5964


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை துரித மீட்புப் பணிகளில் ஈடுபடுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள்!

கிழக்கு மாகாணத்தில் துரித மீட்புப் பணிகளை மேற்கொள்ள மேலதிக தொண்டர்களை இணையுமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும திருகோணமலை மாவட்டங்களில் கடற்கொந்தளிப்பு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கரையோரக் கிரமாங்களில் துரித மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிக மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ள இந்தப் பகுதிகளில் சுமாா 7 ஆயிரம் பொதுமக்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படாததால், அவர்களை மீட்கும் பணிகள் அவசரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளையில் இந்த பகுதிகளில் பல்லாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து இன்னமும் அவசர மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல், அவதியுற்று வருகின்றனர் என அந்தப் பகுதி புனர்வாழ்வுகழக பணியகங்கள் அறிவித்துள்ளன.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் வாகனப் போக்குவரத்துக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், படகுகள் மூலமே உடனடி உதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளது. இது இநதப் பணிகளை மேலும் தாமதப்படுத்தி வருகிறது.

இநதப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொண்டு வரும் அந்த மாவட்ட புனர்வாழ்வுக்கழகத்தினர், உடனடித் தேவைகளுக்காக உணவு மற்றும் மருத்துவ பொருட்களை கொழும்பு மற்றும் பிற பகுதிகளிலிருந்து அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

அத்துடன் வன்னி மற்றும் மன்னார் பகுதிகளிலிருந்து சுமார் 300 தொண்டர்கள் 10 லொறிகளில் உணவுப் பொருட்களுடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அவசர மனிதாபிமான பணிகளுக்காக சென்றுகொண்டிருக்கின்றனர்.

மேலும், இந்தப் பணிகளில் ஈடுபட முன்வரும் தொண்டர்களை உடனடியாக அங்கு சென்று இணையுமாறு புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

தமது மட்டக்களப்பு பணிமனையை 0 65 222 53 99 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், அம்பாறை மாவட்டத்தை 01 0667 22 79 050 எனும் தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொள்ளுமாறு புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜீ விடுத்த அவசர வேண்டுதலில் கோரியுள்ளார்.

இதேவேளையில் பயிற்றப்பட்ட வைத்தியர்கள், தாதிகள் மற்றும் மருத்துவத் தொண்டர்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

இந்த அழைப்பை ஏற்று பணியாற்ற முன்வரும் தொண்டர்களை உடனடியாக தமது அனைததுலக கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமீட்பு மற்றும் மனிதாபிமானப பணிகளுக்கு அனைத்து தரப்பினரையும் ஒத்துழைப்புத் தருமாறு புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது.

குறிப்பாக, நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உரிய காலத்தில் துரிதமாக சென்றடைவதற்கு, அரசு, அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் தனியார் பொதுநிறுவனங்கள் உதவிடல் வேண்டும்.

இதேவேளை திருமலைக்கு சென்று கொண்டிருந்த நிவாரணப் பொருட்கள் அடங்கிய லொறிகள் ஹபரணைப் பகுதியில் சில இடையூறுகள் ஏற்பட்டமை தமக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பேரழிவின தாக்கங்களைப் பார்வையிடவும், இடம் பெறும் புனர்வாழ்வுப் பணிகளை கண்காணிப்பதற்காகவும் அனைத்நுலக ஊடகவியலாளர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அழைததுச் செல்ல புனர்வாழ்வுக்கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

## வைபவத்தில் பங்கேற்ற அனைவரும் பலி!

யால தேசிய வனவிலங்குப் பூங்காவில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட அனைவரும், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் கொல்லப்பட்டுவிட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை நாணயமாற்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் பாலித சில்வா குணவர்த்தன அவரது பாரியார் ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

## கிழக்குப் பகுதிக்கு பிரதமர் விஜயம்!

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்து, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் ஆராய்ந்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கே பிரதமர் விஜயம் செய்தார்.

அந்தப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் உட்பட, பொது வசதிகளைத் துரிதமாக வழங்குமாறு மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசின் உயர் அதிகாரிகளுக்குப் பிரதமர் பணித்துள்ளார்.

## அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க தேசிய நல்லிணக்கம் தேவை!

### கருஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டைத் தற்போதைய அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பதற்கு, தேசிய நல்லிணக்கம் ஏற்படவேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் மநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல கட்சிகளும் அபிப்பிராய பேதங்களை மறந்து, ஐக்கியமாகச் செயற்படவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி நடத்திய கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இலங்கைச் சமூகம் சோகமயமான நிலைமையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு உன்னதமான முறையில் செயறபட்டு வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி அடிப்படையில், அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் பணியை ஆரம்பிக்க இருப்பதாக அவர் கூறினார்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் காலை பத்து மணியளவில் மாவட்ட அரச செயலகத்தில் விசேட கூட்ட மொன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம், விடுதலைப புலிகளின் மட்டு.அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன், திட்டமிடல் பணிப்பாளர் தூயவன், சிரான் பணிப்பாளர் செல்வின், கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரவீந்திரநாத், மற்றும் முஸ்லிம் காங்கிரஸ நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் அமீர் அலி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மக்களுக்கு அவசர மணிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பான தகவல்களைத் திரட்டும்வகையில், புள்ளிவிபரக் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் மட்டக்களப்பு நாவலடியில் 4 சடலமூலங்களும், படுவான் கரையில் 12 சடலங்களும் மீட்கப்பட்டபோதிலும், அவை சிதைவடைந்து, உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் அந்த இடத்திலேயே புதைக் கப்பட்டன.

## அரசியல் பேதங்கள் இன்றி உதவிகளைச் செய்யவேண்டும்

### திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன மத பேதம் இன்றி மக்கள் உதவிகளை வழங்கி வருகின்றனர். சர்வதேச, உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் ஏற்பாட்டில் இவைகள் சேகரிக்கப்பட்டு, வழங்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது குறித்து திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் -

இப்பிரதேசங்களுக்கு எவரும் கட்டுப்பாடு இன்றி உதவிகளை வந்து வழங்கமுடியும். நாம் எவரையும இப்பிரதேசங்களுக்கு வரவேண்டாம் எனத் தடுக்கவில்லை.

பொலிஸார் சிலர் சிவில் உடையில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசமான ஈச்சிலம்பற்றுக்கு வந்த பொது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினர்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனைவரும் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும். இதில் அரசியல் பேதங்கள் இருககக் கூடாது. நேற்று முன்தினம் காலை தொடக்கம் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசமான கட்டைப்பறிச்சான் பகுதிக்கு வெளியிடங்களில் இருந்து பெரும்பான்மை இன மக்கள் வந்து உதவிகளை வழங்கிச் சென்றுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் வந்த பார்த்துச் சென்றுள்ளன.

அவைகள் எந்த விதமான உதவிகளையும் கொண்டு வர.வில்லை. தொடர்ந்து வரும் தினங்களில் அவர்களும் உதவிகளை கொண்டு வருவார்கள். அரசாங்க உதவிகள் இன்னமும் இப்பகுதிகளுக்கு கிடைக்கவில்லை. இவை கிடைக்கப்பெறின் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஓரளவு நீங்கும்.

இதேவேளை, கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் உடமைகளை சிலர் திட்டமிட்டு சூறையாடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசங்களுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்க முடியாது உள்ளது. உரிமையில்லாத வீடுகளுக்குச்சென்று அபகரிக்கும் நோக்கில் எவராவது பொருட்களை எடுத்து வருவது கண்டுபிடிக்கப்படின் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் எனவும் எழிலன் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் உயிரிழந்தோர் 25 ஆயிரமாக உயரலாம்

### சமூகசேவை திணைக்களம் தெரிவிப்பு!

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் உயிரிழந்த 18706 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத்தொகை 25 ஆயிரம் வரை அதிகரிக்கலாம் என்று சமூக சேவைத்திணைக்களத்தின் உயர் அதிகாரியான ரி.எம் வணிகசூரிய தெரிவித்தார்.

இதனால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தேடும் பணி தொடர்ந்தும் இடம் பெற்றுவருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 8 ஆயிரத்து 303 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2076 பேரும் உயிரிழந்துள்ளனர்.

காலி மாவட்டத்தில் 2000 பேரும், மாத்தறையில் 1167 பேரும், அம்பாந தோட்டையில் 1500 பேரும், மட்டக்களப்பில் 800 பேரும், திருகோணமலையில் 710 பேரும், முல்லைத்தீவில் 300 பேரும், வவுனியாவில் 140 பேரும், களுத்துறையில் 80 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 68 பேரும், கிளிநொச்சியில் 28 பேரும், கம்பஹாவில் 7 பேரும், புத்தளத்தில் 4 பேரும், உயிரிழந்துள்ளதாக சமூகசேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மக்கள் பீதியடையக் கூடியதான காலநிலை மாற்றமேதுமில்லை!

### வளிமண்டலத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் பீதியடையத் தக்க வகையிலான எந்தக் காலநிலை மாற்றங்களும் ஏற்படவில்லை என்று, வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை அவதான நிலையத்தின் பணிப்பாளர் ஜெயதிலக பண்டா கருத்து வெளியிடுகையில் -

இந்தக் காலப்பகுதியில் பருவப் பெயர்ச்சிமழை பெய்வது இயல்பான ஒன்று. அப்போது இலங்கையை அண்டிய கடற்பகுதி சற்றுக கொந்தளிப்பாகக் காணப்படும். ஆனால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாது. எனினும் கரையோரப் பிரதேசங்களில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

பருவப் பெயர்ச்சி காரணமாக இலங்கையின் மேற்கு, வடக்குப் பிரதேசங்களில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் இலங்கையைத் தாக்கக்கூடிய எந்த விதமான பூமியதிர்ச்சியும் பதிவாகவில்லை என்று புவியியல் ஆய்வு அகழ்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பூமி அதிர்ச்சி தொடர்பாக - புவியியல் விஞ்ஞான ரீதியாக அச்சங்கொள்ளக்கூடிய காரணிகள் எதுவும இல்லை என்று திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் வர்ணசூரிய தெரிவித்தார்.

## பாதிக்கப்படாத மக்கள் பலரும் நிவாரணம் பெற முயல்கின்றனர்!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களைப் பாதிக்கப் படாத பலரும் பெற்றுக்கொள்ள முனைவதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

தமது உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்து முகாம்களில் அல்லலபடும் மக்கள் செய்வதறியாது தவிக்கும் போது கிழக்கில் சில அதிகார மட்டத்தினர் பாதிக்கப்படாத உறவினர்களைப் பாதிக்கப்பட்டவர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக நலன்புரி முகாம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


அத்துடன் சில பகுதிகளில் நிவாரணப் பொருட்கள் கையாடப்படுவதாகவும், பின் கதவால் வீடுகளுக்கு கடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சில தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் சிறிய தொகைப் பொருட்களை வழங்க மக்களை வரிசைப்படுத்தி ஒளிப்பதிவை மேற்கொள்வதாகவும் கிழக்கு மக்கள் கவலை தெரிவித்தனர்.


இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தான் அணிக்கு படுதோல்வி!







(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மெல்போர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது.

நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 85 ஓட்டங்களுக்குள் இம்ரான் பர்ஹத் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால் அடுத்த இரண்டு விக்கெட்டுக்களும் 94 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் வீழ்த்தப்பட்டது. இதில் யாசிர் ஹமீட் 2, சல்மான் பட் 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் யுனிஸ்கான் மற்றும் யுகானா இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதனால் பாகிஸ்தான் அணிக்கு நல்லதொரு ஓட்ட எண்ணிக்கை கிடைத்தது. இதில் அணி 286 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் யுகானா 111 ஓட்டங்களுடனும், அணி 298 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் யுனிஸ்கான் 87 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்த ஜோடியின் இணைப்பாட்டம் முடிவிற்கு வந்ததும் அதற்குப் பின்னர் வந்தவர்கள் எவரும் பெரிதாக ஓட்டங்களைப் பெறாத நிலையில் பாகிஸ்தான் அணி 341 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் குறிப்பிடும்படியாக யுகானா 111, யுனிஸ்கான் 87, சல்மான்



பட் 70, கம்ரன் அக்மல் 24 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அப்துல் ரஸாக் 76 பந்துகளைச் சந்தித்து ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி, வோன் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், மக்ரா, கஸ்பரோவிச் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது விக்கெட்டை 13 ஓட்டங்களில் இழந்தது. இதில் ஹைடன் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து அணி 32 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பொண்டிங் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் லாங்கருடன் இணைந்த மார்ட்டின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும், லாங்கர் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் லீமன் 11, கிளார்க் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பின்னர் மார்ட்டினுடன் - கில்கிறிஸ்ட் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் 51 பந்துகளில் 1 சிக்ஸர் மற்றும் 04 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் வோன் 10, மார்ட்டின் 142, கஸ்பரோவிச் 4, மக்ரா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க ஜிலெஸ்பி ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 379 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சொகைப் அக்தர் மற்றும் டனிஸ் கனேரியா இருவரும் தலா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, அவுஸ்ரேலிய பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாதநிலையில் 163 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டையும் இழந்தது. இதில் சொகைப் மலிக் 41, யாசிர் ஹமீட் மற்றும் யுனிஸ்கான் இருவரும் தலா 23 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மக்ரா 4, வோன் 3, ஜிலெஸ்பி 2 மற்றும் கஸ்பரோவிச் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 126 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 27.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இதில் லாங்கர் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க பொண்டிங் 62, ஹைடன் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். லாங்கரின் விக்கெட்டை சமி கைப்பற்றினார்.

இந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் விளையாடவில்லை.

இந்த வருடம் அவுஸ்ரேலியா விளையாடிய 14 டெஸ்ட் போட்டிகளில் பத்தில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இரண்டு அணி வீரர்களும் இலங்கையில் கடற் கொந்தளிப்பினால் உயிரிழந்த மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதுடன், கறுப்புப்பட்டி அணிந்தே விளையாடினர்.

## விளையாட்டு

# கடற்கொந்தளிப்பிலிருந்து முரளி மயிரிழையில் உயிர் தப்பினார்!



(கொழும்பு)

கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் இருந்து இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய விவகாரம் தற்போது வெளியாகி இருக்கிறது.

காலி நகரில் சம்பவத்தன்று முரளிதரன் ஓய்வு எடுத்து வந்தார். கொந்தளிப்பு ஏற்படுவதற்கு சரியாக 10 நிமிடத்துக்கு முன்பாக முரளிதரன் அந்த இடத்தை விட்டு கிளம்பி சென்றிருந்தார். அவர் கிளம்பிய அடுத்த சில நிமிடங்களில் அந்த இடத்தை பெரும் கொந்தளிப்பு தாக்கியது. இதனால் அந்த பகுதி இருந்த இடம்தெரியாமல் போய்விட்டது.

இது பற்றிப் பேட்டியளித்த முரளிதரன்:

நான் உயிர்தப்பியது கடவுளின் செயல். இலங்கையில் மிகப்பெரிய அளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. இது போன்ற சூழ்நிலையில் கிரிக்கெட் நடத்துவது சரியாக இருக்காது என்றார்.

அத்தப்பத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி தற்போது நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நடந்து முடிந்த முதல் போட்டியில் இலங்கை தோல்வி கண்டது. 2 ஆவது ஆட்டம் நேற்று நடைபெறுவதாக இருந்தது. எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துயரத்தினால் போட்டிகள் ஜனவரி 2 ஆம் திகதி முதல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இலங்கை கிரிக்கெட் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் போட்டியை ரத்துச் செய்து விட்டு வீரர்கள் தாயகம் திரும்ப விருப்பத்துடன் இருப்பதாக மேலாளர் கருத்துத் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு கட்டுப்பட்டுத்தான் நாங்கள் இங்கே இருக்கிறோம். போட்டியில் ஆடும் மனநிலையில் வீரர்கள் இல்லை. தாயகத்தில் ஏற்பட்ட சோகம் காரணமாக இந்த தொடரை ரத்துச் செய்யவது தொடர்பாக பேசிவருகிறோம். ஆனால் இதில் நாங்கள் தனிப்பட்ட முறையில் முடிவு எதையும் எடுக்க முடியாது. எனவே பொறுமையுடன் காத்திருக்கிறோம் என்றார்.

சுனாமி தாக்குதலில் இலங்கை கிரிக்கெட் வீரர்களான ஜெயசூரியா, சந்தன ஆகியோரின் தாயார் மற்றும் அத்தப்பத்துவின் தந்தை ஆகியோர் காயமடைந்தனர் .

## வைத்தியசாலையில் அப்துல் ரஸாக் அனுமதி

(மெல்போர்ன்)

மூச்சுத்திணறல் காரணமாக மெல்போர்ன் வைத்தியசாலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அப்துல் ரஸாக் அனுமதிக்கப்பட்டார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் ரஸாக் மூன்றாம் நாளான செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பங்கேற்கவில்லை.

திங்கட்கிழமை ஆட்டம் முடிவுற்றதும் அவர் சுகவீனமடைந்து காணப்பட்டார். இதையடுத்து அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு மருத்துவர் அழைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. அதன்பிறகே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது நிலை குறித்து பின்னரே அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; இங்கிலாந்து 4 விக்கெட்டுக்கு 385!

தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் டேர்பனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவில் இங்கிலாந்து அணி



தனது இரண்டாவது இனிங்ஸில் ஆரம்ப வீரர்களான திரஸ்கொதிக் மற்றும் ஸ்ரரஸ் இருவரதும் சதத்தால் 4 விக்கெட் இழப்பிற்கு 385 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. இதில் ஸ்ரரஸ் 25, வோகன் மற்றும் திரஸ்கொதிக் இருவரும் தலா 18 , ஜோன்ஸ் 24, ஜோன்ஸ் 21 ஆகியோர் குறிப்பிடும்படியான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பொலக் 4, என்ரினி 3, ஸ்ரைன் 2, போஜே ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதல் இனிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்க அணி கலிஸின் சதத்துடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ருடோல்ப் 32, கலிஸ் 162, பொலக் 43, என்ரினி 22 ஓட்டங்களை குறிப்பிடும்படியாக பெற்றனர்.

பந்துவீச்சில் ஹோகாட், ஹர்மிசன் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப் 2 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ் மற்றும் வோகன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது 2 ஆவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான திரஸ்கொதிக் மற்றும் ஸ்ரரஸ் இருவரும் சிறப்பான அடித்தளத்தைக் கொடுத்தனர். இவர்கள் இருவரும் தமக்கிடையே 273 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் திரஸ்கொதிக் 132 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து அணி 293 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் ஸ்ரரஸ் 136 ஓட்டங்களுடனும், அணி 306, 314 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் புட்சர் 13, வோகன் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.



தற்போது தோர்ப் 40, பிளின்ரொப் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் பொலக் மற்றும் கலிஸ் இருவரும் தலா ஒவவொரு விக்கெட்டையும், என்ரினி 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையங்களில்

# போதிய அடிப்படை வசதிகளின்றி மக்கள் அவதிப்படுகின்றனர்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவி வழங்கலில் வடமராட்சி பிரதேசங்களில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொதுமக்கள் பலரிடம் இருந்து உதவிகள் கிடைக்கின்றபோது, அவை பெருமளவில் சமைத்த உணவுகளாகவே இருக்கின்றன. ஆயினும் தற்பொழுது இந்த மக்களுக்கு அதிகாலையில் உலர் உணவுகளும், படுக்கை விரிப்புக்களும் அதிகளவு தேவைப்படுகின்றன.

இதேவேளை, இவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் தற்பொழுது சுகாதார சீர்கேடுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. இந்த நிலைமை- தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சில இடங்களில் சிறுவர்கள் வயிற்றோட்ட நோயால், பாதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயினும், இதுவரையில் இந்த மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் அரச அதிகாரிகளாலும், தேவையான உதவிகள் செய்யப்படுகின்றபோதும், மத்திய அரசில் இருந்து இதுவரை எந்தவித உதவிப் பொருட்களோ, பணிகளோ கிடைக்கவில்லை என அவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கருத்துத் தெரிவிக்கையில் - அரசு பாரபட்சமின்றி உடனடியாகவே வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளை தமிழ் பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (13)



கனடா வளர்ப்பு பெற்றோர் சங்கத்தின் சார்பிலும், திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தின் சார்பிலும் "சுனாமி" கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிதிக்காக லயன் சீமாட்டி கமலா குணராசா ரூபா 50 ஆயிரத்தை அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் ஒப்படைக்கின்றார்.

## கரவெட்டி மருதங்கேணி பகுதிகளுக்கு மாநகரசபை தொண்டர்கள் விரைவு!

இயற்கையின் அனர்த்தத்தால் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளுக்கு உதவும் வகையில், யாழ். மாநகரசபையின் 3 தொண்டர் அணியினர் கரவெட்டிப் பிரதேச செயலர்பிரிவுக்கு, மருதங்கேணி செயலர் பிரிவுக்கு இன்று செல்லவுள்ளனர்.

மனிதாபிமான உதவிகள் புரிவதற்காக 15 பேர் கொண்ட ஓர் அணியினர் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கும், அதேபோன்று 15 பேர்கொண்ட மற்றுமொரு அணியினர் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கும் செல்லவுள்ளனர். இவர்கள் ஒரு வாரகாலம் அங்கு தங்கியிருந்து பணியாற்றுவார்கள் என்றும், அவர்களோடு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி மரியதாஸன் தலைமையில் ஐந்து உதவிமருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழு ஒன்று தேவையான மருத்துவப் பொருட்களுடன் செல்லவுள்ளது. இவர்களும் ஒருவாரகாலமாக அங்கு தங்கியிருந்து சேவை புரிவார்கள் என, யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தெரிவித்தார்.

## கியூடெக் ஏற்பாட்டில் விசேட ஆங்கில வகுப்பு!

கியூடெக் நிறுவன அனுசரணையுடன் சில்லாலை தெற்கில் விசேட ஆங்கில வகுப்புக்களுடன், மாலை நேர வகுப்புக்களும் நடத்தப்பட்டு வருகின்றன. சில்லாலை தெற்கு கிறீஸ் துராசா சமாதானக் குழுவினரால் தரம் 1 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கே மாலை நேரக் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு, மீண்டும் அவர்களை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வருவதாகவும், சமாதானக் குழுத் தலைவர் எஸ்.ஜீ.பாஸ்கரன் தெரிவித்தார். (91)

## மிதிவெடி அபாயக்கல்வியை பாடத்திட்டத்தில் சேர்க்கத் திட்டம்!

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மிதிவெடி அபாயக் கல்வியை மாணவர்களுக்கு பாடத் திட்டத்தில் ஒன்றாக புகட்டுவதற்கு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிதிவெடிகளில் அல்லது வெடி பொருட்களில் விபத்துச் சம்பவங்களுக்கு இலக்காகி பாதிக்கப்பட்டவர்களில் மாணவர்களே அதிகம்.

இதனால், படையினரால் வெடி பொருட்கள் மற்றும் மிதிவெடிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக் மிதிவெடிக் கல்வியை மேலதிகமாக ஒரு பாடமாக பாடத்திட்டத்துடன் இணைத்து புகட்டப்படவுள்ளது. தற்போது, மாவட்டத்தில் இயங்கும் எல்லா பாடசாலைகளிலும் இந்த அபாயக்கல்வியை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. 17)

## யாழ்.இந்துவுடன் இணைய சாரணர்களுக்கு அழைப்பு!

கடற்கொந்தளிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டு, நெல்லிடியிலுள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு உதவிகளை வழங்கும் பணியில், யாழ்.இந்துக்கல்லூரியின் சாரணர்குழு ஈடுபட்டுள்ளது.

இவர்கள் நேற்றுமுன்தினம் முதல் உலர் உணவு சேகரிக்கும் பணியை ஆரம்பித்தனர்.

இதேவேளை, இவர்களது சேவையை விஸ்தரித்து, நிறைவான சேவையை வழங்குவதற்காக யாழ்.குடாநாட்டிலுள்ள ஏனைய பாடசாலை சாரணர்களையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## நோயாளர்களைப் பராமரிப்பதற்கு முன்வருமாறு இளைஞர்களுக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பு அனர்த்தம் காரணமாக தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்பட்ட பாரிய உயிரிழப்புக்களால் துன்பத்தில் இருக்கின்ற எமது மக்களுக்கு பலவகையான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன.

அதன் ஓர் அங்கமாக காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள உறவுகளைப் பராமரிப்பதற்கு தொண்டர்கள் தேவைப்படுகின்றனர். எமது அனைத்து இளைஞர்களும் உதவிபுரிய முன்வரவேண்டும் என்றும், உதவிபுரிய விரும்புவோர் யாழ்.போதனா வைத்தியசாலை நலன்புரி நிலையத்துடன் தொடர்பு கொண்டு, எமது உறவுகளுக்கு உதவிபுரிய முன்வரவேண்டும் என யாழ்மாவட்ட அரசியற்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மஹா கும்பாபிஷேகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நுணாவில் மத்தி அருள்மிகு கந்தசாமி கோவில் மஹா கும்பாபிஷேகம், எதிர்வரும் ஜனவரி மாதம் 27 திகதி வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (24)

### குடும்ப உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தோருக்கு

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தேர்வுக் கடிதம் கிடைக்கப்பெற்று, பயிற்சிநெறியில் கலந்துகொள்ளாத குடும்பநலன் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் 19.01.2005 இல் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, 05.01.2005 இறகு முன்னர் யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### இறந்தவருடைய கண்கள் தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை மரணமடைந்த அளவெட்டியைச் சேர்ந்த க.சின்னையா (வயது - 91) என்பவருடைய கண்கள் இரண்டும் அவரது உறவினர்களால் தானம் செய்யப்பட்டன. இந்தக் கண்களை கண் சத்திர சிகிச்சை நிபுணர் குகதாசன், வேறொருவருக்கு பொருத்தி பார்வையளிக்கப்பட்டுள்ளது. (111)

### திருவாசகவிழா

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்றுவரும் திருவாசகவிழாத் தொடரில் நாளை மாலை 5.30 மணிக்கு தெய்வ வாசகம் எனும் பொருளில் தமிழ்த் துறை மாணவன் பாலசண்முகன சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து பண்ணிசைப் போதனாசிரியர் தி.சிவயோகராணியின் திருவாசகப் பண்ணிசையும் இடம்பெறவுள்ளது.

### பரீட்சைகள் பிற்போடப்பட்டன

அடுத்தமாதம் 1, 2, 8, 9 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பப் பரீட்சைகள் (எ.எ.ரி.) தற்போது இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதெனவும், இந்தப் பரீட்சைகள் யாவும் 2005 பெப்ரவரி 5,6,12,13 ஆம் திகதிகளில் நடைபெறுமெனவும் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.கமலேஸ்வரன் அறிவித்துள்ளார். (24)

### மட்டக்களப்பு தேசியக் கல்லூரி மாணவர்களுக்கு

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மற்றும் சக மாணவர்களுக்கும் உதவுதல், தொடர்பான கலந்துரையாடல் ஒன்று - இன்று காலை 9 மணியளவில் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் உள்ள BECON தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளதால், அனைத்து மட்டக்களப்பு தேசியக் கல்வியியற் கல்லூரி உள்ளக ஆசிரிய பயிலுனர்களையும் கலந்துகொள்ளுமாறு மட்டு[illegible] வியற்கல்லூரி மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர்.

## சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்தோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றம்!

மருதங்கேணி தாளையடி பிரதேசங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை மருத்துவர் தெரிவித்தார்.

உடனடி சிகிச்சைக்காகப் இந்த பிரதேசங்களிலிருந்து பாதிக்கப்பட்ட பலரும், சாவகச்சேரி வைத்திசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டவர்களைத் தவிர, ஏனையோர் சிறுகாயங்களுக்காக ஏற்கனவே சிகிச்சை பெற்று, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி போன்ற நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும், தற்போது பாதிக்கப்பட்ட ஒரு சிலரே சாவகச்சேரி வைத்தியசாலையில் தங்கியிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

## மிதிவெடி அகற்றும் தொண்டர்கள் மணற்காட்டுப் பகுதியை பார்வை!

கடற்கொந்தளிப்பால் மிதிவெடிகள் பரவி இருக்கலாம் என்ற சந்தேகத்தை அடுத்து, மணற்காட்டுப் பகுதியில் மீட்புப்பணியில் ஈடுபடுவோர் துரிதமாகச் செயற்படமுடியாதுள்ளது.

ஆகையால், இந்த மிதிவெடிகளை அகற்றும் பணிக்காக நேற்று முன்தினம் மணற்காடுப் பகுதிக்கு யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தலைமையிலான குழுவொன்று சென்று பார்வையிட்டது.

அங்கு பணிபுரிந்துகொண்டிருக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடமராட்சிக் கிளைத் தலைவர் எஸ்.தவராஜா மற்றும் 4 பெண்கள் உட்பட 30 பேர்கொண்ட குழுவொன்று மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்வதுடன், நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இரண்டு மிதிவெடிகள் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மணற்காடுப் பகுதியில் கடற்கரையிலிருந்து நீண்ட தூரத்துக்குப் பால் கூட, 6 அடி உயரத்துககு தண்ணீர் வழிந்தோடி அந்தக் கிராமத்தையே அழித்துச் சென்றதையும் அவர்கள் பார்வையிட்டனர். (12)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : கௌ.அக்ஷயன்
முகவரி : கனகரத்னம் வீதி, அரியாலை

ஏழாவது அகவை



பெயர் : கு.பிரணவன்
முகவரி : சேதுபதி துன்னாலை

பத்தாவது அகவை



பெயர் : ப.தனிகா
முகவரி : அல்வாய்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# நெல்லிமரத்தை நடுவதன் மூலம் பல பிரயோசனங்களைப் பெறமுடியும்

இயற்கையாகக் கிடைக்கும் காய் கனிகளை உண்டு வந்தாலே நோய் நொடியில்லாமல் வாழலாம். இவ்வாறான பல காய்கனிகளில், நெல்லிக் கனியும் மிகவும் பிரபல்யமான பழ வகையாகும். ஏனைய பழங்களின் சுவையைவிட ஐந்து வகையான சுவைகள் நெல்லிக்காயில் அடங்கியுள்ளன.

விற்றமின் 'பீ' அதிகமாவுள்ள நெல்லிக்காய் மனித உடலுக்கு மிகவும் உபயோகமானது. நெல்லிக்காய் மட்டுமல்ல, நெல்லிமரத்தின் இலையும் மருத்துவ குணம் நிறைந்தது. நெல்லிமரத்தின் விளைவுகளை மருத்துவ ரீதியான தேவைகளுக்கும், உணவுக்கும் பயன்படுத்த முடியும். உவர்நீர்ச் சுவையுடைய கிணற்றுக்கு அருகில், நெல்லிமரம் ஒன்றை நடுவதால் காலப்போக்கில் உவர்நீர்ச் சுவையுடைய கிணற்று நீர், நன்னீராகும் வாய்ப்புகள் உண்டு.


**காலநிலை**

நெல்லிமரத்துக்கு உகந்த சுற்றாடலும், தகுந்த காலநிலையும் எமது பிரதேசத்திலுள்ளது. ஏனெனில் உலர்வலயப் பிரதேசங்களிலேயே நெல்லிமரம் செழித்து வளரக்கூடியது. இதற்கு வெப்பமான காலநிலை தேவைப்படுகிறது.

**இனம் காணல்**

முதலில் நெல்லி மரங்களை இனங்காணவேண்டும். கசப்புத்தன்மை கூடியவை, அளவில் பெரியவை, அளவில் சிறியவை, சுவையில் கூடியது, குறைந்தது என வெவ்வேறு வகையான நெல்லி மரங்கள் உள்ளன.

வர்த்தக ரீதியான தேவைக்கு இவை வெவ்வேறாக இனங்காணப்படல் வேண்டும். அனைத்தும் கலந்து இருப்பின் விற்பனை செய்யும்போது சிரமமாக இருக்கும். எனவே நல்ல பலன்களைத் தரும் நெல்லிமரங்களை இனங்காண வேண்டும். அதன் பின்னர், நல்ல இன நெல்லிமர விதைகளைத் தெரிவுசெய்து பாதுகாக்க வேண்டும். அதன்மூலம், நெல்லிக்கன்றுகளை உருவாக்கி வளர்க்கவேண்டும்.



ஆனால், நெல்லிமரங்களை முளைக்க வைக்கும்போது சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம். அதை முளைக்க வைக்கும் வழிமுறைகளை அறிந்துகொண்டு, முளைக்க வைக்கும் போது அதனுடைய முழுப் பலாபலன்களையும் அடைந்து கொள்ளலாம்.

நெல்லி விதைக்குள் மேலும் சிறிய ஐந்து விதைகள் உள்ளன. இவற்றையே முளைக்க வைக்கவேண்டும். இதற்கு நெல்லிக்காயின் மேல்சதைப் பகுதியை நீக்கி, அதன் பெரிய விதைகளை ஒரு நாள் அல்லது இரண்டு நாள் வெயிலில் காயவைக்கவேண்டும். அப்பொழுது பெரிய விதைக்குள் இருக்கும் சிறிய விதைகள் வெளியே வரும்.

இந்தச் சிறிய விதைகளை எடுத்து பொலித்தீன் பைகளில் போட்டு, குளிர்சாதனப் பெட்டியின் கீழ்ப்பகுதியில் சுமார் இரண்டு வாரங்கள் வரையில் களஞ்சியப்படுத்த வேண்டும். அதன்பின்னர் அந்த விதைகளை எடுத்து பதியம் வைக்கலாம். இவை இரண்டு வாரங்களுக்குள் முளைக்கும்.

பின்னர் இவற்றை எடுத்து பொலித்தீன் பைகளில் முளைக்கவைக்கவேண்டும். அதன்பின்னர் உரிய இடங்களில் நிலத்தில் முளைக்கவைக்கலாம். நெல்லி மரங்கள் வருடத்துக்கு ஒருமுறை மாத்திரமே விளைச்சலைத் தரக்கூடியவை.

**பயன்பாடுகள்**

நெல்லிக்கனிகள் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுகிறது. தனியாக நெல்லிக்கனியை உண்ணமுடியும். ஊறுகாய், சம்பல் போன்ற தயாரிப்புகள் மூலமும் உணவாகப் பயன்படுத்தலாம்.

நெல்லிக்காயைப் பயன்படுத்தி சிறுகைத்தொழில் முயற்சியையும் ஆரம்பிக்க முடியும். நெல்லிக் கோடியல், நெல்லி ஜாம், நெல்லி ஊறுகாய் போன்ற தயாரிப்புகளை உற்பத்தி செய்யமுடி யும். அத்துடன் மருத்துவ ரீதியிலான தேவைக்கும் காயவைத்து, பதப்படுத்திப் பயன்படுத்தலாம். இவ்வாறு, நெல்லிக் காய்கள் மூலம் பல பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சசி சந்திரகாசன்

# யாழ்.குடாநாட்டில் – பண்ணையில் இறால் வளர்ப்புக்கான இடத்தேர்வு சம்பந்தமான கள ஆய்வு அறிக்கை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**3. கல்லுண்டாய் வெளி**

பிரதான அராலி வீதிக்கு குறுக்காகவுள்ள கல்லுண்டாய் வெளியின் வழுக்கியாற்றுக்கு அருகாமையிலுள்ள பிரதேசம் பார்வையிடப்பட்டது.

இந்தப் பிரதேசம் – இறால் வளர்க்கக் கூடிய இடமாக நிபுணர்குழுவால் தீர்மானிக்கப்பட்ட போதிலும், உடனடியாக இறால் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ள முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

காரணம் –

☛ இந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதிகள் தனியார் நிலமாகக் காணப்படுவதால் நிலத்தை மொத்தமாகப் பெறுவதில் உள்ள சிக்கல்.

☛ பாதுகாப்புப் பிரச்சினை காணப்படுகிறது.

☛ இறால்வளர்ப்புப் பிரதேசத்தை அண்டிய குடியிருப்புப் பகுதிகளுக்கு காலப்போக்கில் பாதிப்பு ஏற்படலாம்.

**4. அராலி தெற்கு செட்டியார் மடம்**

அராலி தெற்கு செட்டியார் மடப் பிரதேசத்தின் அராலித்துறைக்கு அண்மையிலுள்ள இடம் பார்வையிடப் பட்டது. இங்கு இறால் வளர்ப்புக்கு பொருத்தமான பிரதேசமாகக் காணப்பட்ட போதிலும் உடனடியாக இறால் வளர்ப்புத் திட்டம்மேற்கொள்ள முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

காரணம் –

☆ இந்தப் பிரதேசத்தில் உள்ள நிலப் பகுதிகள் யாவும் தனியாருக்குச் சொந்தமாகக் காணப்படுகிறது. மொத்தமாக, உடனடியாக நிலப்பரப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது.

☆ இறால்வளர்ப்புக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசத்தை அண்டிய பகுதிகள் விவசாய நிலங்களாகக் காணப்பவதால், காலப்போக்கில் விவசாய நிலங்கள் பாதிப்படையலாம்.

☆ இந்தப் பிரதேசம் அராலித்துறையாகக் காணப்படுவதால், அராலி கடற்றொழிலாளர்கள் அனைவரினதும் போக்குவரத்துப் பாதையாகக் காணப்படுகிறது.

☆ பாதுகாப்புப் பிரச்சினை உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுவதால், உடன டியாக அனுமதி பெறுவது கடினம்.

**5. காரைநகர்**

காரைநகருக்கு அருகிலுள்ள கடல் நீரேரிப் பகுதி பார்வையிடப்பட்டது. இந்தப் பிரதேசம் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வற்றுப்பெருக்கின் தன்மையை ஆராய்ந்து, அதற்கேற்ப அந்தக் கடனீரேரிப் பிரதேசத்தில் தடாகமொன்று ஏறக்குறைய ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டது. அந்தத் தடாகத்தில் ஒருவழி ஏற்படுத்தி, அதனுடாக தேவைக்கேற்ப நீரை உட்புக விட்டு இயற்கையாக இறால் வளர்க்கப்பட்டது. ஆனால், இது சீராகப் பராமரிக்கப்பட முடியாமலும், அரசியல் சூழ்நிலைகளாலும் தொடர்ந்து வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாமல் கைவிடப்பட்டது.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வற்றுப் பெருக்கின்போது பாலைமீன் குஞ்சுகள் இந்தத் தடாகத்தில் ஒதுங்குவது அடையா ளம் காணப்பட்டது. இதனைக் கண்ணுற்ற பிரதேசவாசி ஒருவரால் அவை வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கப் பட்டது. அதன்பிரகாரம், கடலுடன் தொடர்பு படும் வழி அடைக்கப்பட்டு ஒரு போகம் பாலைமீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் இறால் வளர்க்கப்பட்ட போதும், தற்போது இந்தப் பிரதேசத்தில் தாங் கள் கைக்கொண்டுள்ள இறால் வளர்ப்பு முறையைப் பயன்படுத்தி இறால் வளர்க்க முடியாது என நிபுணர்குழுவினரால் தீர்மா னிக்கப்பட்டது.

காரணம் –

✧ இந்தப் பிரதேசம் ஏரிப்பகுதிக்குள்ளேயே வற்றுப்பெருக்கு உட்பட்ட வளர்ப்பு முறையாக அமைக்கப்பட்டுள்ளமை.

✧ போதியளவு நிலமின்மை, அருகிலுள்ள நிலப்பரப்புக்கள் தனியாருக்குச் சொந்தமாகக் காணப்படுவதால், நிலத்தைப் பெறுவது கடினம்.

✧ நெருக்கமான குடியிருப்புக்கள் அருகில் காணப்படுகிறது.

✧ பெரும்பகுதி – ஏரிப் பிரதேசமாகக் காணப்படுவதால், நிபுணர்குழு கைக்கொள்ளும் முறைப்படி கழிவு நீர் அகற்ற வசதிகள் இல்லை.

✧ இதனை அண்டிய பகுதிகளில் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

✧ குடியிருப்புக்களால் மிகவும் சிக்கலான போக்குவரத்துப் பிரதேசமாகக் காணப்படுகிறது.

✧ தற்போது மின்சாரவசதி உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையுள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படவாய்ப்புண்டு.


✧ பாதுகாப்பு பிரச்சினையுள்ளது.

(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 80/= | 90/= | 100/= | 100/= | 100/= | 120/= | 120/= |
| வெண்டிக்காய் | 60/= | 70/= | 80/= | 70/= | 70/= | 60/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 75/= | 80/= | 80/= | 80/= | 90/= | 80/= |
| கத்தரிக்காய் | 80/= | 80/= | 100/= | 70/= | 75/= | 100/= | 100/= |
| பாகற்காய் | 120/= | 90/= | 100/= | 120/= | 110/= | 120/= | 100/= |
| கரட் | 120/= | 90/= | 100/= | 120/= | 110/= | 100/= | 120/= |
| பீற்றூட் | 40/= | 90/= | 100/= | ✳ | 50/= | ✳ | 120/= |
| முருங்கைக்காய் | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ | ✳ |
| வெங்காயம் | 55/= | 50/= | 50/= | 55/= | 50/= | 50/= | 60/= |
| பச்சை மிளகாய் | 40/= | 50/= | 60/= | 80/= | 70/= | 60/= | 80/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில்மலர்

# ஊழியர் பயிற்சியின் பிரதான நோக்கம் அவர்களின் வினைத்திறனைத் தூண்டுவதாகும்

ஊழியருக்குப் பயிற்சியளித்தல் என்பது ஒரு நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் பொதுவானதொரு செயற்பாடாகும். ஆளணி முகாமையில் ஊழியருக்குப் பயிற்சியளித்தல் ஒரு பிரிவாக இருக்கிறது. ஒரு நிறுவன ஆளணியின் முழுப்பயனும் கிடைக்க வேண்டுமாயின் அறிவும், அனுபவமும் ஒருங்கே காணப்பட வேண்டும்.

இவ்வாறான அறிவு அவரது தொழில்சார் கல்வியாலும் அனுபவமானது. அவரது தொழில் சார் பயிற்சிகளாலும் உருவாக்கப்படமுடியும். ஊழியருக்குப் பயிற்சியளித்தலானது பின்வரும் முதன்மை நோக்கங்களையும், நன்மைகளையும் கொண்டு காணப்படுகிறது.

**முதன்மை நோக்கங்கள்**

★ ஊழியர்களை உச்ச மட்டத் தில் பயன்படுத்தல்.

★ ஊழியர்களின் வினைத்திறனைத் தூண்டுதல்.

★ பதவி உயர்வுக்கு ஒருவரைத் தயார் செய்தல்.

**நன்மைகள்**

★ மேற்பார்வைப் பளுவைக் குறைத்தல்.

★ பணிமுறைமைகள் முன்னேற்றப்படுகிறது.

★ இயந்திரப் பொறிகள், பராமரிப்புச் செலவு குறைவடைதல்.

★ தரம் மேம்பாடடையும்.

★ இவை மட்டுமே ஊழியர் பயிற்சி மூலம் பெறப்படும் நன்மைகள் எனக் கூற முடியாது. மேலும் பல நன்மைகள் பயிற்சியால் கிடைக்கும்.

பயிற்சியளித்தல், பல்வேறுபட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுடன், அவர்களுக்கான பயிற்சியின் வகைகளும் வேறுபடுகிறது. அவையாவன ,

- அறிமுகப் பயிற்சி.
- தொழிற்பயிற்சி.
- மேற்பார்வைப் பயிற்சி.
- நிறைவேற்று அலுவலர் அபிவிருத்திப் பயிற்சி.

**அறிமுகப் பயிற்சி**

குறிப்பிட்ட தொழிலில் புதிதாக இணைந்தவர் பெற்றுக்கொள்ளும் பயிற்சியே அறிமுகப் பயிற்சியாகும். இந்தப் பயிற்சியினூடாகத் தொழிலின் தன்மையை ஊழியரொருவர் அறிந்து கொள்ள முடிவதுடன், நிறுவனத் தொழிலுக்கு ஏற்றபடி தன்னையும் மாற்றிக் கொள்ள முடியும்.

இந்தப் பயிற்சியானது, விரிவுரைகளாக வேலைத்தள அலுவலகப் பயிற்சி முறைகள் மூலம் அளிக்கப் படும்.

**தொழிற்பயிற்சி**

தொழிற்பயிற்சி குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற அளிக்கப்படுவதாகும். இந்தப் பயிற்சி, பின்வரும் முறையில் அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சியின் கீழ் தொழில் சார் அனுபவம் உடையோரால் பயிற்சியளிக்கப்படும்.

★ நிறுவனப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியளிக்கப்படும்.

★ மேற்பார்வையாளரால் பயிற்சியளிக்கப்படும்.

★ பயிலுநர் முறைமை காணப்படும்.

**மேற்பார்வைப் பயிற்சி**

ஊழியரை மேற்பார்வை செய்வது தொடர்பான பயிற்சியே இந்தப் பயிற்சியாகும். இந்தப் பயிற்சி நெறி, பின்வரும் பயிற்சி முறைமூலம் அளிக்கப்படும்.

✳ அலுவலக மேற்பார்வை தொடர்பான பாடநெறி.

✳ முகாமைத்துவப் பயிற்சி

✳ உயர்தகுதிப் பரீட்சைக்குத் தயார் படுத்தல்.

**நிறைவேற்று - அலுவலர் அபிவிருத்திப் பயிற்சி**

நிறைவேற்று அலுவலர்கள் ஆற்றலை மேம்படுத்தும் செயல்முறைப் பயிற்சியே இதுவாகும். இதற்குக் குறுங்கால, முழுநேரக் கற்கைநெறிகள் ஏற்படுத்தப்பட்டுப் பயிற்சிமுறைமைகள் அளிக்கப்படும்.

இங்கு பயிற்சியின் தேவையை அடையாளங்கண்டு, பயிற்சியளித்தலையே பயிற்சியளித்த[illegible] பாடாகக் கருதப்படுகிறது. இது ஒவ்வொரு நிறுவனப் பகுதிகளிலும் செயல் நிறைவேற்றுப் பதிவுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், தீர்மானிக்கப்படும்.

இதன்படி ஒரு ஊழியர் பயிற்சி போதாது எனக் கருதப்படுமிடத்து, பயிற்சி பெறுவோரின் கல்வி மட்டம், முதிர்ச்சி, ஒரு வேலைபற்றிய அனுபவம் என்பவற்றுக்கேற்ப வடிவமைக்கப்பட முடியும். இவ்வாறு பயிற்சியளிக்கப்படுவோர் தெரிவு செய்யப் பட வேண்டும். இதற்கு யார் யாருக்குப் பயிற்சி தேவைப்படுகிறது, யார் பயிற்சியின் மூலம் உச்சப் பயனைப் பெறமுடியும் என்பதையும் நிறுவன நோக்கத்துடன் தொடர்பு படுத்தி அடையாளம் கண்டு பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

இதைப்போலவே பயிற்றுவோரின் தெரிவும் காணப்படுகிறது. பயிற்றுவோரின் தெரிவில் சரியான நடைமுறை பின்பற்றப்படாவிட்டால், பயிற்சியளித் தல் வெற்றியடையாது போவதற்குச் சந் தர்ப்பம் உள்ளது. எனவே பயிற்றுவோர், பயிற்சி தொடர்பான புலமை உடையவரா கவும், கற்பித்தல் முறையில் நுட்பங்கள் அறிந்தவராகவும் இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பயிற்சி, பயிற்சியளிப்ப வரால், பின்வரும் முறைகளில் நடத்தப்படும்.

**1. விரிவுரை**

இந்தமுறை தொழில் தொடர்பான ஆரம்ப அறிவை அறிவதற்கு உதவுகிறது. அதாவது புதிதாக விடயத்தை அறிபவர்களுக்கு உதவுகிறது.

**2. மகாநாடு**

ஒரு விடயம் பற்றிய அறிவுடையோரின் சிந்தனையையும், அனுபவத்தையும் ஒன்று சேர்க்கும் முறையாகும். இது மேற்பார்வைப் பயிற்சித் திட்டங்களுக்குப் பயன்படுகிறது.

**3. செய்முறை**


இது தொழிற்பயிற்சியில் அனுபவத்தை உருவாக்க உதவுகிறது. இங்கு தொழிற்பயிற்சியைச் செய்முறைமூலம் செய்துகாட்டித் தெளிவு படுத்தப்படும்.

இவ்வாறாக ஒவ்வொரு நிறுவனமும், தனது ஊழியர் பயிற்சியளித்தல் செயற்பாடுகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், தனது பயிற்சிகளை வழங்குகிறது. ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம், ஒரு நிறுவனம் தனது ஊழியர்களை உச்சளவில் பயன்படுத்தி, நிறுவன நோக்கை அடைய உதவுகின்றது. பயிற்சியளித்தலின் பிரதானமான நோக்கம் ஊழியர்விளைத்திறனைத் தூண்டுவதேயாகும்.

பிரசன்னா

# குறைந்த விலையில் பாதுகாப்பான குப்பி விளக்கு - 'சதீப'

இலங்கையில் 32 சதவீதமான வீடுகளுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை. அத்தகைய 15 லட்சம் வீடுகளில் பாதுகாப்பற்ற குப்பிவிளக்குகளே பன்படுத்தப்படுகிறது. மின்சார வசதியுள்ள வீடுகளில் கூட மின்தடை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இத்தகைய விளக்குகளே பயன்படுத்தப்படுகிறது.



இலங்கையில்குப்பி விளக்கு விபத்துக்களினால் ஒவ் வொரு நாளும் சுமார் 40 பேர் வரையில் பாதிக்கப்பட்டுகின்றனர். யாழ்ப்பாணத்தில் 2004 தை. பங்குனி மாதங்களில் 105 விபத்துக்கள், 5 மரணம் சித்திரை. ஆனி மாதங்களில் 80 விபத்துக்கள், 4 மரணம், எரிகாயங்களுக்கு உட்பட்டதாகப் பதியப்பட்டுள்ளது. இவற்றுள் பாதுகாப்பற்ற குப்பி விளக்கினால் ஏற்படுகின்ற விபத்துகளும் அடங்குகின்றன.

குப்பிவிளக்கு விபத்துக்கான அடிப்படைக் காரணம் — இவை சரியும் போது சிந்தும் எண்ணெய்யால் ஏற்படுவது ஆகும். இந்த விபத்தால் தீக்காயம் அங்கங்கள் உருக்குலைவு, உடன் ஊனம் என்பவற்றுடன் மரணங்களும் சம்பவிக்கும் வாய்ப் புக்கள் உண்டு. சாதாரண வீடுகளில் பாவிக்கப்படும் பாதுகாப்பற்ற குப்பிவிளக்குகள் உயரமானதாகவும், குறுகியதாகவும், எடை குறைவாகவும் இருப்பதால், எளிதில் கவிழ்ந்து விடும். அத்துடன் திருகக் கூடிய ஒரு மூடி இல்லாதிருப்பதும், இவை கவிழ்ந்தவுடன் எண்ணெய் சிந்த ஏதுவாகிறது. ஆனால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பான குப்பி விளக்குகள் எடை கூடியதாகவும், பருமனானதாகவும், உயரம் குறைந்ததாகவும் காணப்படுகிறது. இதனுடைய திருகக் கூடிய மூடி எண்ணெய் சிந்துவதைத் தடுக்கிறது. இதனால் தீ விபத்து ஏற்படுவதை இயன்றளவு குறைக்கலாம்.

*சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவகைத் தாவரத்தின் ஆக்கிரமிப்பால்

# வவுனியா குளத்தில் நீர் வழிந்தோடத் தடை!

(வவுனியா)

வவுனியா குளத்தை ஒருவகைத் தாவரம் ஆக்கிரமித்துள்ளதால், நீர் விரைவாக ஆவியாகி வற்றிவிடும் தன்மை காணப்படுகிறது. அண்மையில் பெய்த பெரும் மழையோடு இந்தத் தாவரம் மிகவும் விரைவாக குளத்தை ஆக்கிரமித்துள்ளது.

இதனை அகற்றும் பணிகள் தற்போது தீவிரமாக மனித வளத்தைப் பயன்படுத்தி நடைபெற்று வருகின்றபோதிலும், முற்றுமுழுதாகச் சாத்தியப்படாத விடயமாகவே அமைந்துள்ளது. வவுனியா குளத்தில் 392 ஏக்கர் நிலப்பரப்பில் நீர் காணப்படுகிறது. அதில் 100 ஏக்கர் நீர்ப் பரதேசத்தில் இந்த நீர் வாழைத தாவரம் ஆக்கிரமித்துள்ளதாக வவுனியாகுளத்துக்குப் பொறுப்பான நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் நல்லையா ஸ்ரீகந்தராசா தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது -

வவுனியா நகரத்து உணவு விடுதிக் கழிவுகள், வடிகால் ஊடாகக் குளத்தைச் சென்றடைவதால் நல்ல போஷாக்குதன்மை குளத்தில் காணப்படுவதாலும் இந்த நீர் வாழை குளத்தில் செழிப்பாக வளர்ந்து ஆக்கிரமித்துள்ளது.

இதனால் பல தீமைகள் ஏற்பட்டுள்ளன. நீரைமூடி தாவரம் உள்ளதால், ஈரலிப்புத் தன்மை காணப்படுகிறது. அதனால் நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளது. சூரிய வெளிச்சம் நீரைச் சென்றடையாததால் ஒரு நொதிப்புத்தன்மை ஏற்பட்டு, நச்சுவாயு உருவாகி நீர் மாசடைகின்றது. இதனால் நிலத்தடி நீரும் மாசடையும் எனவும் தெரிவித்தார்.

13 அடி நீர்கொள்ளக்கூடிய வவுனியா குளம் நிரம்பி வழிந்தோடுகின்றது. இந்தத் தாவரம் வழிந்தோடும் நீரைத் தடைசெய்வதால் பாரிய மழை பெய்யுமானால், குளக் கட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என அஞ்சியே நீர்ப்பாசன அதிகாரிகள் தொழிலாளர்களுடைய உதவியுடன் தாவரத்தை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு நாளைக்கு 60 முதல் 70 தொழிலாளர்கள் இந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரங்களில் கழிவுகள் கடலுக்குள் அல்லது ஓடும் நீரோடைக்குள் செலுத்தப்படுவது வழக்கமாகும். வவுனியாவைப் பொறுத்த வரை அவ்வாறான நிலை இல்லை. ஆகையால் முழுக்கழிவுகளும் வவுனியா குளத்தினுள் செல்ல வேண்டிய கட்டாய நிலையுள்ளது. போஷாக்குச் சத்துக்கள் போதியளவு கிடைப்பதால், நீர் வாழை செழிப்பாக வளர்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. ஓரளவாவது இதனை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். உடனடியாக அகற்ற இயந்திர சாதனங்கள் இல்லாததால், மனித வளத்தைக் கொண்டு களைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கிருமிநாசினிகளை விசிறி அழிக்கமுடியும். ஆனால், நீரின் தன்மையை அது பாதிக்கக்கூடும் என்பதால் அந்த நடவடிக்கையை நிறுத்தியுள்ளோம் - என அவர் மேலும் தெரிவித்தார்.

பழம்பெரும் வவுனியா குளத்தின் கீழ் கணிசமான அளவு விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது ஈழ நாடு வன்னிப் பிராந்தியத்தில் உதவி பொருட்கள் சேகரிக்கும் பணியில்

நமது ஈழ நாடு வன்னி கிளைப் பணிமனையால் நேற்று முன்தினம் தொடக்கம் உதவிப் பொருட்களை சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் வட்டக்கச்சி, உருத்திரபுரம், கோணாவில், திருவையாறு, கனகாம்பிகைக் குளம், இரத்தினபுரம் மற்றும் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளின் அமைபின் தொண்டர்கள், உதவிப் பொருட்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வ்ருகின்றனர்.

கிளிநொச்சியில் இலக்கம் 152, கண்டி வீதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தில் உதவிப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

இந்த உதவிப் பொருட்களை வழங்க விரும்புவோர் அலுவலகத்தில் பணமாகவோ அல்லது பொருட்களாகவோ ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு தொகுதிப் பொருட்கள் முல்லைத்தீவுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



# சுகாதார அமைச்சால் இரண்டு லொறிகளில் வடக்குப் பகுதிகளுக்கு மருந்துப் பொருட்கள்!

## வவுனியா மாவட்ட மாகாண பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கடல்கொந்தளிப்பின் பின்னர் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என, வவுனியா மாவட்ட சுகாதார சேவை மாகாண பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஏ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மனித சடலங்களும், மிருகங்களின் உடல்களும் கடலிலிருந்து மிதந்து வரத்தொடங்கியுள்ளன. இவை உரிய முறையில அடக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதனைவிட குடிநீர் மாசடைந்துள்ளது. இதனை சுத்திகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியமாகத் தேவைப்படும் மருந்துப்பொருட்களை சுகாதார அமைச்சிலிருந்து பெற்று, இரண்டு லொறிகளில் வடக்கே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவை போதுமானதாக இல்லை. இன்னும் மேலதிகமாக மருந்துகள் தேவைப்படுகிறது. மேலும் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள கொழும்புக்கு ஒரு லொறி அனுபபிவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் கரையோரப் பிரதேசத்திலிருந்து 2 ஆயிரத்து 795 பேர் வவுனியாவில் தஞ்சம்

(மன்னார)

மன்னார் மாவட்டத்தில் கடற்கரையோரப் பிரதேசத்தில் வசித்து வந்த 700 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 795 பேர் பாதுகாப்புக்கென இடத்தைநாடி வவுனியா மாவட்டத்தை வந்தடைந்துள்ளனர். கடல் அலைவரலாம் என்ற அச்சம் காரணமாக இவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி, வவுனியாவில் உள்ள பாடசாலைகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களில் '12 வயதுக் குட்பட்ட 800 சிறுவர்களும் இருப்பதாக யுனிசெப வவுனியா மாவட்ட அதிகாரி சட்டத்தரணி எஸ். ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் 509 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 116 பேரும், செட்டிகுளத்தில் 169 குடும்பங்களைச் சேர்ந்த 679 பேரும் அகதிகளாக உள்ளனர் என பிரதேச செயலக அறிக்கை தெரிவித்தது.

இவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலை, தமிழ் மத்திய மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, பட்டாணிச்சூர் புளியங்குளம், முஸ்லிம் மகாவித்தியாலயம், செட்டி குளம மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சமைதத உணவு வழங்கப்பட்டு வருகிறது என மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

தமிழர்புனர்வாழ்வுக் கழகம் சில உடனடி உதவிகளை வழங்கியுள்ளதாக அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.





முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கொந்தளிப்பில் சிக்குண்ட மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளால் உயிருடன் மீட்கப்பட்ட பெண்ணை முதலாவது படத்திலும் - அவருக்கு அவசரமாக ஒட்சிசன் சிகிச்சை வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.




# கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு செயற்குழுக்கிடையே கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு செயற்குழுக்கூட்டங்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் - கடலிலிருந்து 1500 கிலோமீற்றர் வரையான மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதால், தற்போதைக்கு அந்த இடங்களுக்குத் திரும்பமுடியாது. எனவே இவர்களை குறைந்தது 3 மாதங்கள் வரை பராமரிக்க வேண்டிய தேவையுள்ளது. இது மக்களை பராமரிக்க வேண்டிய தேவையுள்ளது. இது தொடர்பாக இந்தக் கலந்துரையடலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 ஆயிரம் பேருக் கான 15 நாட்களுக்கு மட்டும் உணவுச் செலவுக்கு மட்டும் 30 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

உடனடியாக தேவைப்படும் அத்தியாவசிய உணவு, உடுபுடவை என்பனவற்றை விடவும் சுகாதார நடைமுறைப்படுத்தல்களுக்கான அவசியம் உணரப்படுகிறது.

குடிநீர் விநியோகத்துக்கான தண்ணீர்த் தாங்கிகள், அவசரமாக தற்காலிக மலசலகூடங்களை அமைத்தல், தொற்று நோய்கள் பரவுவதை தடுப்பதற்கான மருந்துகள சுவாசத் தொற்று நீக்கி மருநது என்பன பெருமளவில் தேவைப்படுவதாகவும், அவற்றை சேகரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

# பாதிக்கப்பட்ட மக்கள் 9 நலன்புரி நிலையங்களில்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 8 ஆயிரத்து 25 பேர் பளை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 9 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களில் புலோப்பளை நலன்புரி நிலையத்தில் 820 பேரும், மருதங்கேணி நலன்புரி நிலையத்தில் 271 பேரும், கிளிநொச்சி நலன்புரி நிலையத்தில் 325 பேரும், மாசார் நலன்புரி நிலையத்தில் 250 பேரும், இயககச்சி நலன்புரி நிலையத்தில் 284 பேரும், கோவில்வயல் நலன்புரி நிலையத்தில் 211 பேரும், சோரன் பற்று நலன்புரி நிலையத்தில் 310 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை யாழ். ஆயர் குழுவினர் பார்வையிட்டனர்

இயற்கையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை யாழ். ஆயர் குழுவினர் நேற்று முன்தினம் பார்வையிட்டனர். இந்தக் குழுவில் யாழ் .ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் அடிகளார், மனித முன்னேற்ற நடுநிலைய இயககுநர் வணபிதா ஜெயக்குமார் அடிகளார் மற்றும் ஆயரின் செயலர் வணபிதா ரொஷான ஆகியோர, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டு, தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராயந்தனர்.

இவர்கள் முல்லைத்தீவு, அளம்பில், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, பளை, தாளையடி, செம்பியன்பற்று, புலோலி, புலோப்பளை, இயக்கச்சி ஆகிய இடங்ளுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடி, தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

## உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழீழ வைப்பகத்தாலும், கிளிநொச்சி நகர் முஸ்லீம் வியாபாரிகளாலும் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ வைப்பகத்தால், 5 லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள், பாய்கள், பிஸ்கற்கள், பால்மா வகைகள் எனவும், கிளிநொச்சி நகர்சந்தைப் பகுதி முஸ்லிம் வர்த்தகர்களால் 2 லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை*
*மிகல்காணும் கேடு தரற்கு*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வதேச - மனிதநேய - அமைப்புகளின் நிவாரண உதவிகள் குறித்து...

மனதப் பேரழிவை ஏற்படுத்தித் திசையெங்கும் அவலக் குரல் எழுப்பவைத்துள்ள இயற்கையின் அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பெருமளவில் வாழும வடக்கு - கிழக்கு பகுதிகளில், இழப்புகளுக்குள்ளாகி நிராதரவான நிலையில் துயரம்சுமந்து நிற்கும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கான பணிகளில் அரசுகாட்டும் பெறுப்பற்றதும், பாரபட்சம் காட்டும் தன்மை கொண்டதுமான செயற்பாடுகள் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் நடவடிக்கையாகவே உள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களின் இழப்பு, மற்றும் பாதிப்புப் பற்றிய விபரங்களை மறைக்க முயலும் நோக்குடன், அங்கு பெரிதாக எதுவும் நிகழவில்லை என்று காட்டும் அரசின் செயற்பாடுகள், தென்பகுதியில் நடைபெற்ற அனர்த்தங்களையே பெரிதுபடுத்தி சர்வதேச சமூகத்திடம் பிரசாரம் செய்வது வேதனைக்குரியதாகும்.

சர்வதேச நாடுகளிடம் நிவாரணப்பணிகளுக்கான அவசர உதவிகள்கோரி வெளிவிவகார அமைச்சு அனுப்பியுள்ள அவசர செய்தியல் - வடக்கு மக்களின் இழப்புக்கள், அவலங்கள் பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டு, கிழக்கு மற்றும் தென்பகுதியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளியுறவு அமைச்சின் தமிழின எதிர்ப்புணர்வு, இயற்கையின் சீற்றத்தால் இன்னலுறும் மக்களை நோக்கியும் பாய்வது தான் துயரம்தரும் செய்தியாகும். வடபகுதி மக்களின் அவலத்தை - அந்த அமைச்சும், அதன் அமைச்சரும் எப்படி மதிக்கறார்கள் என்பதை வெளிநாடுகளுக்கான அவசரச் செய்தியில் வடபகுதி பற்றி எதுவும் குறிப்பிடாமையையே உணர்த்துவதாகவும் உள்ளது.

இதேவேளை, அரசின் பங்காளியான தமிழின விரோதப் பேரினவாதிகளான ஜே.வி.பி குழுவைச் சேர்ந்தவர்கள் வடபகுதியில் பாதிப்புப் பெரிதாக இல்லை என்று கூறிவருவதாகவும் தமிழர் தரப்பு விசனம் தெரிவித்திருப்பதைப் பார்க்கையில், தமிழர்கள் எப்படியானால் எமக்கென்ன என்ற பேரினவாதிகளின் மனிதநேயமற்ற போக்கின் கொடூரத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

அம்பாறை மாவட்டம் நோக்கி விரைந்த அமைச்சர்கள் பலரும் அங்கு இயற்கை அனர்த்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்ட நான்கு தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேச செயலர் பிரிவுகளை முற்றாகப் புறக்கணித்து சென்றுள்ளமையை அரச அராஜகமாகவே பார்க்கவேண்டியுள்ளது.

வவுனியாவில் இருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் திருமலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனத் திங்களன்று லொறிமூலமாக அனுப்பிவைத்த நிவாரணப் பொருட்களை ஹபரணையில வைத்துச் சிங்கள இனவாத அமைப்பொன்றைச் சேர்ந்த கலகக்காரர் கும்பலொன்று வழிமறித்து அதனை வேறு இடத்துக்கு அனுப்பிவைக்க முயன்றதாகவும் அறியவந்துள்ளது. இந்தக் "காடையா" கும்பல் அங்கிருந்த பொலிஸாரின் உதவியுடன் இதனைச் செய்யமுயன்றுள்ளது.

இதுதான் பௌத்த சிங்கள தர்மமா?

இரு தினங்களின் முன்னர் மலையகப் பகுதிகளில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தலைமையில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு திருமலை நோக்கிச்சென்ற மூன்று வாகனங்களை அதே ஹபரனையில் இடைமறித்த இராணுவம் - காடையர் இணைந்த கும்பலொன்று வழிமறித்து இரு லொறிகளிலுள்ள நிவாரணப் பொருட்களைப் பலாத்காரமாக இறக்கிவிட்டு மூன்றாவது லொறியைக் கண்டிக்கே திருப்பிவிட்டுள்ளனர். இது குறித்து ஜனாதிபதிக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாம்!

எப்படி இருக்கிறது பாருங்கள் அரச படையினரின் மனிதாபிமானம்! இருவாரங்களின் முன்னர் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இயல்புவாழ்வை இழந்து பாடசாலைகள், கோவில்கள், பொது இடங்களில் தஞ்சம்புகுந்த மக்களுக்கே இதுவரை முறையான அரச நிவாரணங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதிலும் தமிழ்மக்கள் அரசாலும் ஜனாதிபதியாலும் பாரபட்சமாகவே நடத்தப்பட்டார்கள் என்பதை நாடறியும்.

2002 இல் சமாதான சூழல் முகிழ்ந்த வேளையில் தென்பகுதி மற்றும் மலையகப்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண சரிவுப் பேரவலததின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடபகுதி மக்கள் உணர்வுபூர்வமாக அள்ளிவழங்கிய நிவாரணப்பொருட்களை விடுதலைப்புலிகளே எடுத்துச்சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய நிகழ்வை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுக்குக் கொண்டு வருவதும் அவசியமாகவே உள்ளது.


அரசு உதவாவிட்டாலும் பரவாயில்லை, உதவுவதுபோல் பம்மாத்துக் காட்டவும் வேண்டாம், உதவும் கரங்களைத் தடுக்கவும் வேண்டாம்.

யுத்தத்தை மூர்க்கத்தனமாக நடத்திக்கொண்டு பொருளாதாரத்தடையையும் அமுல்செய்து தமிழ்மக்களை இம்சைப்படுத்திய அரச அதிகாரபீடத்தவர்களின் இனவெறி புதிய தொன்றேயல்ல... அரசும் அரசசார்பு அமைப்புகளும் நிவாரணப்பணிகளை எவ்வாறு மேற்கொள்ளும் என்பதையும் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

இந்த நிலையில் சர்வதேச உதவிகள் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினூடாக வழங்கப்படுமாயின், அது தமிழ்மக்களைச் சரியான முறையில் சென்றடையப் போவது கிடையாது என்பதை மேற்குறித்த சம்பவங்கள் நிரூபிப்பதாகவே உள்ளது.

சர்வதேச சமூகமும், மனிதநேய அமைப்புக்களும் இந்த விடயத்தில் கவனமாகச் செயற்படுதல்மூலம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வழிசெய்யமுடியும்.

## நாடும் நடப்பும்




### ஊர்சுற்றியார் பார்வையில்...

# அழிவில் நொந்த வீட்டில் பயனடையும் சிலருமுண்டு; அதிசயமுமுண்டு!

"பிச்சை எடுத்துதாம் பெருமாள் அதைப் பிடுங்கிச்சுதாம் அனுமான்" என்றொரு ஊர்ப்பழமொழி சொல்லுவாங்க. அதை மாதிரி ஹபரண காட்டுப்பகுதிக்குள் நிற்கும் 'அனுமார்கள்' நடந்துகொண்டிருப்பதாக பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்தது.

இச்செய்தியைப் பார்த்ததும் "மக்கள் மடிந்தாலும் மனிதம் மடியவில்லை" என்று மனிதாபிமானத்துடன் ஓடோடி உதவி செய்யும் மனிதர்களிடையே மனித உருக்கொண்ட நாயினும் கடையவர்கள் இன்னமும் இருக்கிறார்களே என்று எண்ணத் தோன்றுகிறது.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் பலர் உடுத்த உடையுடன் உயிர்மட்டும் எஞ்சியிருப்பவர்கள்தான் இவர்கள். இவர்களுக்கு உதவியளித்து, உயிரைக் காப்பாற்றுவதற்காக நல்லமனம் படைத்தோர் உதவுகின்றனர். இந்த உதவிகளைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு பல அமைப்புக்களும் கொண்டுசெல்கின்றனர்.

இப்படி மூன்று லொறிகளில் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது வழியில் ஹபரணவில் இராணுவத்தினர் சிலரும் மற்றும் சிலரும் இவற்றைத் தட்டிப்பறித்ததாக அச் செய்தி கூறகிறது. இராணுவத்தினருடன் நின்றவர்கள் தங்களை அரச அதிகாரிகள் என்று சொல்லிக்கொண்டார்களாம்.

இராணுவத்துக்கும், அரச அதிகாரிகள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கும் இது ஒன்றும் புதிதல்ல. தமிழர் தாயகத்தில் கடந்த பல்லாண்டுகளாகத் தட்டிப்பறித்து அனுபவித்துப் பழக்கப்பட்டவர்கள் இவர்கள். எஸ்.பி.திஸநாயக்க போன்றவர்கள் மீது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. தமிழர் தாயகத்தில் கடந்த பல ஆண்டுகளில் இராணுவம், கடற்படை, காவற்துறை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் பலரின சொத்துக்கள் ஏன் மதிப்பிடுவதில்லை.

எனறும் அனுபவித்திராத பெருந்துயரை நாடும், மக்களும் அனுபவித்துக்கெண்டிருக்கும் இச்சமயத்தில் எஞ்சியிருக்கும் உயிரைக் காபபாற்றிக்கொள்வதற்காகக் கிடைக்கவிருக்கும் உதவிகளைக்கூட வழியில் தட்டிப்பறித்து என்ன செயல்? ஹபரணவில் தட்டிப்பறித்ததாகச் சொல்லப்படும் செய்தி பற்றி மற்றொரு ஊடகம் தட்டிப்பறிக்கப்பட்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறது.

தட்டிப்பறிக்கப்பட்டது உண்மையானால் இவர்களை மனித வர்க்கத்திலேயே சேர்க்கக்கூடாது. இவர்களை அவர்களது சகாக்களும் உறவினர்களும்கூட ஒதுக்கிவைத்துப் பாடம் புகட்ட வேண்டும்.

இதுவரை காணாத இயற்கை அனர்த்தம் இலங்கையில் ஏற்பட்டிருக்கிறது. இச்சமயத்திலாவது நாட்டின் அரசியல் தலைவர்கள் சகல பேதங்களை மறந்து அழிந்துபோயிருக்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்று ஊடகங்கள் பலவும் புத்திஜீவிகள் பலரும் கோரிக்கை வைக்கின்றனர்.

சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல. விடுதலைப் புலிகளையும் சேர்த்து அழிந்துபோன நாட்டைக் கட்டி எழுப்பவேண்டுமென்று சிலர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேசமயம் என்றுமே புலிப்பயங்கரவாதம் பற்றிய செய்திகளையே வெளியிடும் கொழும்பு ஆங்கில தினசரியொன்று பேரழிவுகளால் கடற்புலிகளின் படகுகளும், ஆயுதங்களும் பெருமளவில் காணாமற் போயுள்ளதாகவும், சேதமடைந்துள்ளதாகவும் செய்தி வெளியிட்டிருக்கிறது.

நிவாரண உதவிகள் எந்தப்பாகுபாடுமின்றி வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வழங்கப்படுமென்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலைக்குச் சென்று பார்த்தபின் தெரிவித்திருக்கிறார்.

வெந்த வீட்டில் (அல்லது நொந்த வீட்டில்) பிடுங்கியது அறுதி என்று சொல்லப்படுவதுண்டு. தாங்கமுடியாத இழப்புக்களுடன் நொந்துபோயிருக்கும் மக்களிடம் உறவாடி பொருட்களை அபகரித்துச்செல்லும் கயவர்கள் பற்றியும் செய்திகள் கிடைக்கின்றன.

'கரையொதுங்கும் சடலங்களைக் கூட அடையாளம் காணச் செல்லும் சிலர் அந்தச் சடலங்கள் நகைகள் அணிந்திருக்கின்றனவா என்பதிலும் அதிக அக்கறைகாட்டுகிறார்களாம். இப்புடியான அவலநேரத்தில் கொள்ளையடிக்கும் கூட்டங்களுக்கும் குறைவிருக்காது. வேறு பல நாடுகளிலும் இப்படி நடந்திருக்கிறது. இங்கும் நடக்கத் தவறவில்லை.

வதந்தியைப் பரப்புவதிலும் நம்மக்கள் குறைவில்லை. இந்தச் சமயத்திலும்கூட மக்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டுவிடக்கூடாதென்பதிலும் சிலர் கவனமாகச் செயற்படுகின்றனா. ஜேர்மனியில் சில நகரங்களில் தமிழ்சிறுவர்கள் கூட தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக உண்டியல் குலுக்கி நிதிசேகரிக்கிறார்கள் என்ற செய்தியறிந்து அவர்களை மானசீகமான வாழ்த்துவோர் பலர்.

தமிழர் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கோரி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்த வேண்டுகோள் ஜேர்மனியில் டொச்மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறதாம். ஜேர்மனியர்களும் இதற்கு நிதிசேர்க்க உதவுவதாகவும் அங்கிருந்து செய்திகள் கிடைக்கின்றன.

பேரழிவு பேரலைகளால் அழிவுற்ற நாடுகளின் பகுதிகளிலிருந்து சில அபூர்வமான செய்திகளும் கிடைக்கின்றன. பேரலை கிளம்பிப் பேரழிவை ஏற்படுத்திப்போன மூன்று நாட்களுக்குப் பின் பட்டனகல என்ற காட்டுப்பகுதியில் சுமார் 13 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் உயிர்தப்பிப் பிழைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறான். இந்தப் பையன் அதிர்ச்சி காரணமாகப் பேசமுடியாதிருக்கிறான். கலவான என்ற இடத்தைச் சேர்ந்தவன் என்றும், தனது பெயர் நுவான் அப்பு என்றும் தெரிவித்திருக்கிறானாம். இவன மட்டுமே இவனது குடும்பத்தில், அனர்த்தத்திலிருந்து தப்பியிருக்கிறானாம்.

இன்னுமொரு அதிசயமான செய்தி.

பிறந்து இருபது நாட்களேயான பச்சிளம் குழந்தை அதைப படுக்க வைத்திருந்த மெத்தையுடன் மிதந்து உயிர்தப்பியிருக்கிறது.

மலேஷியாவில் பினாங்கு நகரில் சுப்பையா என்பவர் உணவுச் சாலை ஒன்று வைத்திருக்கிறார். பினாங்கில் பட்டு. பெறிஸ்கை கடற்கரையில் இந்த உணவுச்சாலை இருக்கிறது. இதறகுப் பின்புறத்தில் உள்ள அறையில் துளசி என்ற இந்த 20 நாட்குழந்தை மெத்தையில் தூங்கிக் கொண்டிருந்த சமயம் கடலிலிருந்து கிளம்பிய பேரலை வந்து தாக்கியிருக்கிறது. "நாங்கள் எல்லோரும் அலையினால் தூக்கி வீசப்பட்டோம் பல மீற்றர் தூரத்தில் நாங்கள் போய் விழுந்தோம். விழுந்த இடத்திலிருந்த ஒரு தூணைக் கெட்டியாக கட்டிப் பிடித்துக் கொண்டேன்" என்று சுப்பையா சொன்னார்.

55 வயதான சுப்பையாவின் மனைவி அன்னை மேரி (40 வயது) சீறிப்பாய்ந்து கொண்டிருந்த நீரைக் கிழித்துக் கொண்டு குழந்தை தூங்கிக்கொண்டிருந்த அறைக்குள் போய்ப்பார்த்திருக்கிறாள்.

"எங்கள் குழந்தை நீருக்கு மேல் ஒன்றரை மீற்றர் உயரத்தில் மெத்தையுடன் மிதந்து அழுதுகொண்டிருந்தான். இது ஆண்டவனருள்தான்" என்று சுப்பையா சொன்னார். இந்த அனர்த்தத்தினால் மலோஷியாவில் 60 பேர் கொல்லப்பட்டும் 200 பேர் வரை காயமடைந்துமிருப்பதாக மலேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்னும் இதுபோன்ற செய்திகள் வந்து கொண்டிருக்கலாம். நமது தாயகத்தில் புனர்வாழ்வளிக்கப்படவேண்டிய மக்கள் ஏராளம். வெளிநாடுகளின் பாரிய உதவிகள் இல்லாமல் இவற்றைச் செய்யமுடியாது. போரினால் ஏற்பட்ட அழிவுகளையே சீர்செய்யமுடியவில்லை. இந் நிலையில் இயற்கை அனர்த்தமும் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

சுருங்கச் சொன்னால் உருவாகும் தமிழர் தாயகம் திட்டமிட்டமுறையில் புதிதாக அமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் சரியான முறையில் இங்குள்ள அழிவுகளை மதிப்பீடு செய்யவேண்டும். அதற்கேற்ப திட்டமிடவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்

கே.ரீ.கணேசலிங்கம்

# அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டும் சீனா - இலங்கை உறவு நெருக்கம்

சீனாவிடம் ஆயுத தளபாடங்களை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்யக்கூடாது என அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளது. சமாதானப் போதனையாளர்களும், ஆயுத வியாபாரிகளும் அமெரிக்கர்கள் என்பதைக் காட்டுவதுடன், அமெரிக்காவிடம் அல்லது அமெரிககக் கூட்டாளிகளிடம் இலங்கை அரசாங்கம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யலாம். அல்லது செய்யவேண்டும் என்பதையே அமெரிக்காவின் அறிக்கை காட்டுகிறது. இது எந்தளவுக்கு யதார்த்தமானதென்பதையும் தமிழ் மக்கள் பின்பற்றவேண்டிய வழிமுறைகளையும் விரிவாக நோக்குவோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குச சமாதானம் தீர்வாகுமா? என்பதைக் கேள்விகளாக எழுப்பியவர்களுக்குத் தற்போது விடைகிடைத்திருக்கும். அமெரிக்கர்களும் மற்றும் உலக நாடுகளும் சேர்ந்து போரைப் பற்றி அதிகம் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டனர். ஆனால் அமெரிக்கா சார்ந்த உலகத்துக்கு இன்றுள்ள மிகப் பிரதான பிரச்சினை சீனர்களின் செல்வாக்கு இலங்கையில் அதிகரிககிறது என்பதாகும். குறிப்பாக ஜே.வி.பியின் எழுச்சியும், அது சீனாவுடன் கொண்டிருக்க விரும்பும் நெருககமும் அமெரிக்க நலன்களுக்கு அசெளகரியமானதாகவுள்ளது.

அணமையில் சீனாவில் நிகழ்ந்த ஆசிய அரசியல் மாநாடடுக்குச் சேர்த்ததாகவே அமையவுள்ளது. இதை முறியடிக்க அமெரிக்கா இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியையும், அதன் தலைமைகளையுமே பயன்படுத்தி வந்தது. ஆனால் தற்போதையதலைமையின் பலவீனத்தால அல்லது தந்திரததால் வெளிப்படையாக பேச வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவிட்டது. இத்தகைய நிலைபபாட்டுக்குப் பின்னரும், இலங்கை அரசாங்கத்தின் போக்கு மாறாதுவிட்டால், மாற்று வழிகள் பற்றியே அமெரிக்கா சிந்திக்கத் தொடங்கும்.

ஆனால், ஜே.வி.பியின் வளர்ச்சியைத் தடுப்பதென்பதோ அல்லது ஜே.வி.பி-சீன உறவைத் தடுப்பதென்பதோ சாதாரண, சாதகமான விடயமல்ல. மிக ஆபத்தானது. அது தென்னிலங்கை மக்கள் சார்ந்தது. அந்த மக்களின் நிலைப்பாடும் ஜே.வி.பி சார்ந்ததாக அமையும்போது அதன் போக்கைக் கட்டுப்படுத்துவது கடினமானது. அதனால், அமெரிக்கா மாற்று வழிகள் பற்றியே அதிகம் சிந்திக்கத் தொடஙகிவிட்ட தெனலாம். அது தவிர்க்கமுடியாததுமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தைப்பற்றி முதலில் அமெரிக்கா கவனம் எடுக்க முயலும். அதுவும் தோற்றுப்போகவே வாய்ப்புக்கள் அதிகமுண்டு. அதனால், வடக்கு -கிழக்கு அரசியல் தலைமை சார்ந்து சில முடிவுகளை எடுக்கும் வெளிப்படுத்தினால் அதிக மாறுதல் ஏற்படும். கிழக்குத் திமோர் மிக அண்மைய அனுபவம் என்பதை மறந்துவிடவேண்டாம். மனித சங்கிலிப் போராட்டத்தைச் சமாதானத்துக்கான போராட்டமாக மட்டும் கருதாது, தமிழ் மக்களது ஒட்டுமொத்தமான உணர்வாகக் கருதி எல்லோரும் அணிதிரள வேண்டும். மக்கள் விடுதலைக்காகவும், சுதந்திரமான வாழ்வுக்காகவும் வீதியில் குதித்தால் எந்த ஆதிக்க சக்தியும் அடிபணியும். அதை உலக வரலாற்றில் பல தடவை காண முடிந்தது.

எனவே சமாதானமான வாழ்வு தமிழர்களாகிய எமக்கு வேண்டுமாயின், நாமே எமது உரிமையை முன்னிறுத்திப் போராட வேண்டும். போரின் வடுக்களிலிருந்து நாம் என்றுமே மீளவில்லை. மீள முடியாத வடுக்களுடன் தொடர்ந்து வாழ்வதைவிட, இன்னோர் போர் வெடிக்குமாயின் , போரின் வலி பெரிதாக மாறும். அத்தகைய வலியைப்பற்றி அலட்டிக் கொள்ளாதவர்களையும் இனி வரும் போர் பதம்பார்க்கும். இதனால் தமிழ் மக்கள் கூட்டாக வீதியில் இறங்குவதே பொருத்தமான, சாத்தியமான வழிமுறையாகும். எப்போதும் மௌனிகளாக இருந்துவிட்டுத் துயரப்படும்போது ஏசியோ, போராடியோ பயனில்லை. காலமும், தேசமும் விடுதலைப் போராட்ட அமைப்பும் சாதகமான காலத்தைத் தந்துள்ளது. இதை உலகமும் தந்திருக்கின்றதென்பதை மறுத்துவிடாதீர்கள். எனவே போரைத் தவிர்க்க வேண்டுமாயின் , நியாயமான உரிமைகளைப் பெறவேண்டுமாயின். தமிழ் மக்களின் கூட்டான வலு ஒன்றிணைக்கப்பட்டு வெளிக்காட்டப்படவேண்டும்.

அகிம்சையால் தோற்றே ஆயுதம் தூக்கினோம் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் எமது அகிம்சைப் போராட்டத்தில் எல்லா மக்களும் ஒன்று சேர்ந்திருந்தோமா, கூட்டாகக் கட்சிவேறுபாடின்றி எதிர்ப்பைக் காட்டினோமா? இல்லை. மாறாகக் கட்சியும் அதன் தலைமையும் போராடியதை வைத்தல்லவா அகிம்சை வழி போராடினோம் என்கிறோம். உணமையில் தமிழர் எல்லோருமே ஒன்றாக வீதியில் இறங்கி ஒரு கிழக்குத் திமோர் போன்றோ அல்லது ஒரு உக்ரைன் போன்றோ, ஒரு தீர்மானத்தை எடுப்பதற்காக ஒன்று சேருவோமாயின், இடைக்காலத் தனனாடசி அதிகார சபையை மட்டுமல்ல தனிநாட்டுக்கான எல்லையைக் கூட அடையலாம்.

சர்வதேசம் எப்போதும் நலன் சார்ந்ததே. தனது நகர்வை மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்விலும் அதன் பலமும், பலவீனமும் காணப்படும். அதன் பலவீனத்தைக் கணித்துச் செயற்படும் தேசங்களே சர்வதேச நெருக்கடியையும் வெற்றி கண்டுள்ளன. அத்தகைய நிலை தமிழர்களுக்கும் ஏற்படவேண்டும். அதற்கான தயார்ப்படுத்தல் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் அவசியமானது.

ஜே.வி.பியின் வளர்ச்சியும், சீன - இலங்கை நெருக்கமும் தமிழ் மக்களுக்கு அபாயமானதாகத் தென்பட்டாலும், அவை மறுபக்கத்தில் சாத்தியமான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே அவற்றின் வளர்ச்சியால் நன்மைகளையும், வெற்றிகளையும் தமிழ் மக்களாகிய நாம் எமதாக்கிக் கொள்ளவேண்டுமாயின், அதற்குத் தயாராகவேண்டும். குறிப்பாக அறிவியல் சார்ந்த நிலையிலும், அரசியல் சார்ந்த தந்திரத்தாலும் குறிப்பிட்ட இலக்கை அடையலாம். தமிழ் மக்கள் கூட்டாகவும், அறிவுபூர்வமாகவும், தந்திரமாகவும் செயற்பட்டால் சமாதானம் மட்டுமல்ல, நிரந்தரத் தீர்வும் சாத்தியமாகும். •

**ஜே.வி.பியின் வளர்ச்சியும், சீனா - இலங்கை நெருக்கமும் தமிழ் மக்களுக்கு அபாயமானதாகத் தென்பட்டாலும், அவை மறுபக்கத்தில் சாத்தியமான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.**

ஜே.வி.பிக்குத் தனித்து விசேடமாகக் கொடுக்கப்பட்ட அழைப்பும், சீன நாட்டு அதிகாரிகளின் அண்மைய இரகசிய விஜயமும் அதை மேலும தெளிவாக்குகிறது. இதன் வேகம் மெதுவானதாக அமைந்தாலும் நிதானமானதாகவும், வலுவுடையதாகவும் அமைந்துள்ளது. ஜே.வி.பி ஆட்சியைப் பிடிக்கும்வரை இந்திய சார்பைப் பின்பற்றும். அதன பின்னர் சீனா சார்பிலான ஓர் ஆட்சிக்கே இலங்கையைத் தயாராக்குமென்பதே அமெரிக்கர்களது கணிபபீடாகும். அதன் அடிப்படையிலேயே ஜே.வி.பியும் நகர்கிறது.

ஜே.விபியின் எழுச்சியின் போக்கு தென்னிலங்கையை உறுதிமிக்க தாக்குவதும், அமெரிக்கா சார்ந்த சக்திகளை வெளியேற்றுவதுமாகும். இவற்றை வெறுமனே அரசியல் வார்த்தைகளாக அவர்கள் பிரயோகிக்கவில்லை. ஏனெனில் சீனர்கள் சீனாவில் நடத்துவது அசல் முதலாளித்துவமாக இருந்தாலும், அவர்களது அரசியல் எல்லைகளுக்குள்ளேயே அது சாத்தியமாகும். அது சார்ந்த ஆட்சியையே ஜே.வி.பியினரும் விரும்புகின்றனர் என்பது இலங்கை இனப்பிரச்சினையின் கொள்கையிலிருந்து புரிந்து கொள்ளலாம். எனவே, சீன சார்புக் கொள்கையின் தன்மைகளை ஜே.வி.பி பின்பற்றுகினறதென்பது தெளிவாகிவிட்டது.

ஆனால், அமெரிக்கர்களின் அச்சமெல்லாம் தமது நலனுக்கு எதிரான சீனாவை இலங்கை விடயத்தில் இணைத்துக் கொள்வதால், ஏற்படப்போகும் ஆபத்துக்களாகும். இலங்கையை சீனா கவ்வதென்பது இலஙகையின் நிலப்பரப்புடன் ஒத்த விடயமல்ல. அது ஒரு பரந்த, விரிந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும், தென்னாசியாவின் முக்கியத்துவத்தையும் நிலைக்குள் அமெரிக்கா தள்ளப்படலாம். அமெரிக்காவின் நலனுக்கான நகர்வாகவே அது அமையும். ஆனால், அத்தகைய நகர்வுக்கு முன்பு தென் இலங்கையிலுள்ள சாத்தியமான அனைத்து நகர்வையும் அமெரிக்கா செய்ய முயலும். அது சாத்தியப்படாத பட்சத்தில் மட்டுமே வடகிழக்குப் பக்கம் திசைதிரும்பும். வடக்கு - கிழக்கு அதை எதிர்கொள்ளத் தயாராவது அவசியமானது. ஆபத்துக்குள்ளும் சாதனை படைக்கும் வலு இருந்தால், அதிகமானவற்றை அடையலாம். வடக்கு - கிழக்கின் அரசியல் தலைமையையும், விடுதலைப் போராட்டத்தையும், அதன் அமைப்பையும் சிக்கலுக்குள் சிக்கவைக்கத் திட்டமிட்டவர்கள் தற்போது அதே சிக்கலுக்குள் மாட்டியுள்ளனர். அததகைய சிக்கலுக்குள்ளிருந்து மீளுவதற்கு வடக்கு - கிழக்கு அரசயல் தலைமையினதும் அமைப்பினதும் ஆதரவு அவசியமாகின்றது. இதைத் தீர்மானிக்கும் பலம் தமிழர்களிடையே உண்டு. அதன் காலம் தற்போது உருவாகியிருப்பதுடன், தமிழர்களுக்கான பலத்தை வெளிப்படுத்தும் காலமாகவும் இது உள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களின் போராட்ட வலு அதிகரிக்கப்படவேண்டும். இதுபற்றி விரிவாக நோக்குவோம்.

தமிழ் மக்கள் சமாதானத்தின் எதிரிகள் இல்லை என்பதற்காகத் தொடங்கியுள்ள மனித சங்கிலிப் போராட்டம் வலுவானதொன்றாக மாறவேண்டும். நாம் எப்போதும் ஜனநாயக வழியில் சமாதானமாகவே வாழவிரும்பினோம் என்பதை உலகத்துக்குக் காட்ட வேண்டும். உலகம் (USA) நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும்போது தமிழ் மக்கள் கூட்டாகத் தமது [illegible]



# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

## கடகம்

கடகராசி அன்பர்களே! பேச்சுச் சாமர்த்தியம் உள்ள நீங்கள் பிறரின் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். உங்கள் குடும்பத்தினர் மீது அதிக பாசத்தைச் செலுத்துவீர்கள். சந்திரனை ஆட்சி நாயகனாகக் கொண்ட நீங்கள் வெள்ளை மனது கொண்டவர்கள். உங்கள் கையில் எவ்வளவு பணம் வந்தாலும், அதுஏதோ ஒரு வகையில் செலவாகிவிடும். எனவே கூடிய மட்டும் நீங்கள் கையில் அதிக பணத்தை வைத்துக் கொள்ளக் கூடாது. இந்தப் புத்தாண்டு உங்களுக்குச் சுமாராகவே காணப்படுகிறது. அதற்கான அறிகுறி உங்களுக்குத் தெரிந்திருக்கும். முக்கிய கிரகங்கள் எதுவுமே சாதகமற்ற இடத்தில்தான் இருக்கின்றன. மேலும் இது ஏழரைச் சனியின் தொடக்ககாலம். இதனால் பிற்போக்கான பலன்கள்தான் நடக்குமோ என்று கவலைகொள்ள வேண்டாம். மற்றைய கிரகங்கள் படிப்படியாகச் சாதகமான இடத்துக்கு வருகைதந்து நன்மை தருவார்கள். ஆண்டின் தொடக்கத்தில் சனிபகவான் வக்கிர நிலையில் இருப்பதால் அவரால் நன்மை கிடைக்கும். ஆனால் அவர் மார்ச்மாதம் 24 ஆம் திகதி வக்கிர நிவர்த்தி அடைந்தபின் அவரால் நன்மை தரமுடியாது. 12 ஆம் இடத்தில் இருக்கும் சனி பொருள் விரயத்தையும், அநாவசிய அலைச்சலையும் கொடுப்பார். ஜூன் மாதம் வரும் சனிப்பெயர்ச்சி உங்களுக்கு நன்மை தரும் என்று சொல்ல முடியாது. ஆனால், பலன்கள் மாறுபடும். அதேநேரம் ஜூன் மாதம்வரை சனியில் 7 ஆம் இடத்துப் பார்வையும், அதன்பின் 3 ஆம் இடத்துப் பார்வையும் சாதகமாக அமைந்து, நன்மை கிடைக்கும்.

நிழல் கிரகங்களான ராகு - கேது தற்போது சிறப்பான இடத்தில் இல்லை. ராகு 10 ஆம் இடத்தில் இருந்து தொழிலில் பங்கத்தையும், உடல் உபாதைகளையும் தருவார். கேது 6 இல் இருந்து உங்களைத் தீயோர் சேர்க்கைக்கு ஆளாக்கி அலைக்கழிப்பார். பெப்ரவரி 28 ஆம் திகதி ராகு இடம்பெயர்ந்து 9 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இதுவும் சிறப்பான இடம் அல்லதான். ஆனால் அதன்பின் தொழிலில் இருந்து வந்த பின்தங்கிய நிலை சற்று மறையும். அதேநேரம் கேது சாதகமான இடத்துக்கு வந்துவிடுவார். அவர் பொருளாதார வளத்தைக் கொடுப்பார். இன்னொரு முக்கிய கிரகமான குருபகவான் - தற்போது 3 ஆம் வீட்டில இருப்பது சிறப்பானது அல்ல. அவர் உங்கள் முயற்சியில் தடையை உருவாக்குவார். ஆனால் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி அவர் இடம்மாறி 4 ஆம் இடத்துக்குச் செல்வார். இது சிறப்பான இடம் அல்ல. அதன்பின் அவர் குடும்பத்தில் சிற்சில பிரச்சினையை ஏற்படுத்தலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும்போது ஆண்டு முழுவதும் ஏதாவது ஒரு முக்கிய கிரகங்கள் உங்களுக்கு நன்மை தந்து கொண்டிருக்கிறார்கள். கிரகங்களின் பார்வையும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

எந்த ஒரு காரியங்களையும் நிறைவேற்றக் குருவால் தடைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் அதை முறியடித்து வெற்றிக்கும் அவரே வழிவகுப்பார். மேலும் மார்ச்மாதம் முதல் கேதுவின் பலத்தால் இறையருள் கூடிவரும். இதனால் பொருளாதார வளம் சிறப்பாக அமையும். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். ஆண்டின் பிற்பகுதியில் மதிப்பு, மரியாதை எதிர்பார்த்தபடி சிறப்பாக இருக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு தேவையில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாம். வீண் விவாதத்தைத் தவிர்த்துப் பொறுமையாக இருக்கவேண்டும்.

**குடும்பம்**: வீட்டுத் தேவைகள் சிறப்பாக நிறைவேறும். மகிழ்ச்சிக்குக் குறையிருக்காது. பெண்கள் மிகவும் அனுசரணையாக இருப்பர். தம்பதியினரிடையே அன்பு சிறப்பாக இருக்கும். திருமணம்போன்ற சுப காரியங்கள் செப்ரெம்பர் மாதத்துக்குள் இனிதே நிறைவேறும். செப்ரெம்பர் மாதத்துக்குள் புதிய வீடு வாங்கும் யோகம் வரும். ஆனால் அதற்காகச் சிலர் கடன்வாங்க நேரிடலாம். சிலர் வேலை விஷயமாகக் குடும்பத்தை விட்டுத் தற்காலிகமாகப் பிரியவேண்டியிருக்கும். பிற்போக்கான நிலை ஏதும் வராது. ஜூன் மாதத்துக்குப்பிறகு சனி உங்கள் ராசிக்கு வருவதால், உறவினர்கள் வகையில் மனக்கிலேசம் வரலாம். சற்று ஒதுங்கி இருக்கவும். குறிப்பாக செப்ரெம்பர் மாதம்வரை எதையும் சிந்தித்துப் பேசவும், ஆண்டு இறுதியில் உறவினர்கள் வகையில் இருந்து விரும்பத்தகாத செய்தி வரலாம்.

**உத்தியோகம்**: குருவின் பார்வையால் சிறப்பான பலனைக் காணலாம். மேல் அதிகாரிகளின் ஆதரவும் இருக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கும். சற்றுச் சிரத்தை எடுத்தால், உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். அதேநேரம் வேலையில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. சற்றுச் சிரத்தை எடுத்தால், உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். அதேநேரம் வேலையில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. சிலர் தங்கள் வசம் இருந்த பொறுப்பை இழக்க நேரிடலாம். வேலைப்பளுவைக் கண்டு மிரளவேண்டாம். செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்குப் பிறகு குரு இடம்மாறுகிறார். இதுவும் சிறப்பான இடம் அல்ல. அதன் பின்னரும் வேலைப்பழு கூடும். கோரிக்கைகளை அதிக முயற்சியெடுத்தே நிறைவேற்ற வேண்டியதாக இருக்கும். சக ஊழியர்களின் உதவியை நாடாமல் இருப்பது நல்லது. சிலருக்கு மெமோ வரவாய்ப்பு உண்டு. எனவே அதிக கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஆனால் செப்ரெம்பர் 14 இற்குப் பிறகு பதவிஉயர்வு, சம்பளஉயர்வு போன்றவற்றில் தடையிருக்காது. பொருளாதாரத்தில் எந்தவித சிக்கலும் உருவாகாது.

**வியாபாரம்**: சீரான முன்னேற்றம் காணலாம். ஆண்டின் தொடக்கத்தில் புதிய வியாபாரம் கைகொடுக்கும். பத்திரிகைத் தொழில், தானிய வியாபாரம், தங்கம், இரும்பு மற்றும் உலோக வியாபாரம் சிறப்பாக இருக்கும். தீயோர் சேர்க்கையால் அவதிப்பட்டு வந்தவர்கள் பெப்ரவரி 28 இற்குப் பிறகு அதிலிருந்து விடுபடுவர். ஆனால் மார்ச் மாதத்துக்குப் பிறகு புதிய தொழில் தொடங்குவதைத் தவிர்க்கவும். எதிலும் அதிக முதலீடு செய்யவேண்டாம். கூடுதல் உழைப்பைச் சிந்தவேண்டியிருக்கும். கூட்டாளிகள் யாரையும் நம்பிவிடவேண்டாம். எதையும் ஒன்றுக்கு 10 முறை சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும். தீர்ப்புகள் பாதகமாக அமைய வாய்ப்பு இல்லை. புதிய வழக்குகள் எதிலும் சிக்க வேண்டாம்.

பெண்கள் மகிழ்ச்சி பொங்கக் காணப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் புத்தாடை அணிகலன்களை வாங்கலாம். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். உடல்நலம் சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவு குறையும். உங்களிடம் இருந்த மன வேதனை அடியோடு மறைந்து புத்துணர்ச்சி காணலாம்.

### பரிகாரம்

சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிரகங்களைச் சுற்றி வாருங்கள். இது ஏழரைச் சனிக்காலம் என்பதால், சிவன் கோயில்களுக்குச் சென்று வாருங்கள். யானைக்குக் கரும்பு கொடுக்கலாம். குரு பகவானும் சாதகமற்ற நிலை யில் இருப்பதால், நீங்கள் வியாழக்கிழமை தோறும் தட்சணாமூர்த்தியை வழிபட்டு, கடலை தானம் செய்யலாம். பத்ர காளியம்மன் வழிபாடு உங் களைப் பல்வேறு வழிகளில் முன்னேற்றம் அடையச்செய்யும். இடையூறுகளை எளிதில் முறியடிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுனாமி அலைகளிலிருந்து பாதுகாக்க முன்னெச்சரிக்கை கருவிகள் தேவை!


(லொஸ்ஏஞ்சல்ஸ்)

இந்தோனேஷியா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா மற்றும் இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளின் கடலோரங்களை கடந்த ஞாயிறு தாக்கிய சுனாமி ராட்சத அலைகள் குறித்த தகவல் ஒரு மணிநேரத்துக்கு முன்னரே அமெரிக்க அதிகாரிகளுக்குக் கிடைத்தும் அது குறித்த எச்சரிக்கையை அதிகார பூர்வமாக அந்த நாடுகளுக்குக் கொடுக்க அவர்களால் இயலவில்லை. இதற்கு ஆசியாவில் இதுவரை சுனாமி எச்சரிக்கை மையங்கள் அமையாததுதான் காரணம் எனத் தெரியவருகிறது.

இந்தோனேஷியா, தாய்லாந்து, இந்தியா, மலேசியா மற்றும் இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளின் கடலோரங்களை சுனாமி என்ற ராட்சத அலைகள் கடந்த ஞாயிறன்று கடுமையாகத் தாக்கின. இதனால் இந்த நாடுகளில் பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர். கடந்த 40 ஆண்டுகளில் நடந்துள்ள மிகப்பெரிய பூகம்ப விபத்துக்களில் இதுவும் ஒன்று.

இப்படி ஒரு மிகப்பெரிய ராட்சத அலை இந்த நாடுகளைத் தாக்கப் போகின்றதென்பதை சம்பவம் நடந்த தினமான ஞாயிறு காலை ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக அமெரிக்க நிலநடுக்க ஆய்வுநிபுணர்களுக்குத் தெரிந்தது.





களுத்துறை கடற்பரப்பில் இராட்சதப் பேரலைகள் தாக்குவதைக் காட்டும் செய்மதிப் படங்கள்.

இருப்பினும் இந்த ஆபத்தான ராட்சத அலைகள் குறித்து அவர்களால் ஆசிய நாடுகளை எச்சரிக்கை செய்ய முடியவில்லை. இதற்கு ஆசிய நாடுகளில் இதுவரை 'சுனாமீட்டர்ஸ்' எனப்படும் சுனாமி முன்னெச்சரிக்கை மையங்கள் அமைக்கப்படாதது தான் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

சுனாமி ராட்சத அலைகள் ஆசிய நாடுகளைத் தாக்கி, பேரழிவை உண்டாக்கியுள்ளதைத் தொடர்ந்து இந்தியப் பெருங்கடலில் இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் சுனாமீட்டர்ஸ் மையங்களை அமைக்க வேண்டும் என விஞ்ஞானிகள் வற்புறுத்தியுள்ளனர். நிலநடுக்கங்களால் சுனாமி ராட்சத அலைகள் ஏற்படுகின்றன. கடலுக்கு அடியில் எரிமலைகள் இருந்தாலும் சுனாமி ராட்சத அலைகள் ஏற்பட வாய்ப்புண்டு. சுனாமி அலைகள் ஏற்படும் காலங்களில் கடலோரங்களில் பேரழிவுகள் ஏற்படுகின்றன.

சுனாமி அலைகள் குறித்த முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டால் அழிவுகள் தடுக்கப்படும். சுனாமீட்டர்ஸ் எனப்படும் முன்னெச்சரிக்கை மையங்கள் அமைக்கப்பட்டால், எதிர்காலத்தில் சுனாமி ராட்சத அலைகள் குறித்து முன்னெச்சரிக்கை தரமுடியும். அதன்மூலம் அழிவுகளைத் தடுக்கலாம் என்பது அவர்கள் கருத்தாகவுள்ளது. ஆனால் மிகுந்த பொருட் செலவுகொண்ட இந்தத்திட்டம் இதுவரை செயற்படுத்தப்படவில்லை.

ஒரு சுனாமீட்டர்ஸ் மையம் அமைக்க குறைந்தது 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவாகும். ஒரு மாதகால அவகாசத்தில் இந்த மையங்களை நிறுவ முடியும். ஆனால் வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் ஆசிய நாடுகளால் இவ்வளவு பெரிய செலவில் சுனாமீட்டர்ஸ் மையங்களை அமைக்க முடியவில்லை.


பெர்மார்ட் என்ற நிபுணர் உடனடியாக செயற்படுத்தப்படவேண்டிய இந்தத் திட்டம் - திட்டம் தீட்டுதல், செயற்படுத்தல் ஆகியவற்றுக்கிடையில் ஏற்படும் தாமதம் காரணமாக நின்றுபோயுள்ளது என்று கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்த பிரிவின் தலைவரான ஜோன்ஈக்லாண்ட் கருத்துத் தெரிவிக்கையில் - இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை சுனாமி அலைகளால் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதிகமாக பருவமாற்றங்களைக் கொண்டுள்ள இப்பகுதி அடிக்கடி இயற்கை சீற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது. இந்த நிலையில் ஆசிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே இது போன்ற பேரழிவிற்கு ஒரு தீர்வுகாண முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பசுபிக் நாடுகள் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்துவைத்துள்ளன. நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. குறிப்பாக ஜப்பான்- நிலநடுக்கத்தால் ஏற்படும் சுனாமி உள்ளிட்ட ஆபத்துக்களை சில நொடிகளில் அறியும் வகையிலான அதிநவீன தொழில் நுட்பத்தைப் பெற்றுள்ளன.

இதன்மூலம் நிலநடுக்கம் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்களில் சிக்கவிருக்கும் பகுதிகளில் இருந்து அந்த மக்களை பாதுகாப்பாக வெளியேற்றிவிடுகிறது.

மொத்தத்தில் ஆசிய நாடுகளில் சுனாமி ராட்சத அலைகளைக் கண்டறியும் சுனாமீட்டர்ஸ் எனப்படும் முன்னெச்சரிக்கை மையங்களை இரு இடங்களில் அமைத்தால் மட்டுமே எதிர்காலத்தில் பேரழிவைத் தடுக்க முடியும் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.



## நிகோபார் விமானப் படைத் தளத்தின் அழிவு; இந்திய விமானப்படையின் திட்டங்கள் நாசம்



இந்தியாவில் கார் நிக்கோபார் விமானப் படைத் தளத்தை அதிநவீனமாக்கும் திட்டத்தை சுனாமி கடற் பூகம்பம் நாசப்படுத்திவிட்டது.

சுனாமி அலை தாக்குதலால் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கார் நிக்கோபாரில் உள்ள இந்திய விமானப் படைத்தளமும் நாசமாக்கிவிட்டது. 27 விமானப் படையினர் பலியாகிவிட்டனர். மற்றவர்களின் கதி தெரியவில்லை.

இந்தியாவின் பாதுகாப்பில் பிற்காலத்தில் முக்கிய அங்கம் வகிக்க உள்ள விமானப் படைத்தளம் இது. போர் வியூக அடிப்படையில் இதன் அமைவிடம் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் அமைப்பை விரைவில் மாற்றியமைக்க விமானப் படை திட்டமிட்டிருந்தது. 2 ஆம் உலகப் போரின்போது பிரிட்டன், அமெரிக்கப் படைகளால் அந்தமான், நிக்கோபார் தீவுகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

வங்களா விரிகுடா, இந்திய பெருங்கடல் மற்றும் பசுபிக் கடலின் ஒரு பகுதி ஆகியவை இந்த விமானப் படைத் தளத்தின் கண்காணிப்பில் அமைந்துள்ளன. மேலும், மலாகா ஜலசந்திக்கு செல்லக்கூடிய முக்கிய பாதையாக அந்தமான் கடல் பகுதி திகழ்கிறது. உலகின் 75 சதவீத கச்சாய் எண்ணெய் போக்குவரத்து இவ்வழியாகத் தான் நடக்கிறது.

எனவே, இந்த விமானப் படைத் தளத்தில் எஸ்.யூ - 30 ரக அதிநவீன போர் விமானங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் நிறுத்த விமானப் படை திட்டமிட்டிருந்தது. ஆனால், இந்தத் திட்டத்தை சுனாமி நாசமாக்கிவிட்டது.

இதன் ஓடுபாதை 9 ஆயிரம் அடி நீளம் கொண்டது. கடல் கொந்தளிப்பு தாக்குதலால் ஓடு பாதையின் நீளம் தற்போது 5 ஆயிரம் அடியாக சுருங்கிவிட்டது. அதோடு, கடல்நீர் சூழ்ந்து விட்டது.

இங்கு பயன்படுத்தப்பட்டு வந்த எம்ஐ - 8 ரக ஹெலிகொப்டர்கள் பழுதடைந்துள்ளன. அவற்றை பழுது பார்த்து பயன்படுத்தவும், விமானப் படைத் தளத்தில் பணிபுரிவதற்கான புதிய வீரர்களும் விரைவில் அங்கு செல்லவுள்ளனர். ஓடு பாதையில் 4 ஆயிரம் அடி நாசமாகிவிட்டாலும் விமானப் படை விமானிகள் திறமையாகச் செயற்பட்டு விமானங்களை இங்கு இறக்கி வருகின்றனர்.



## கடல்நீர் மட்டம் மேலும் உயர்வதால் சுனாமி அச்சுறுத்தல் அதிகரிப்பு!

(ஒஸ்லோ)

பூமிப்பந்து வெப்பமடைவதும், சுற்றுச் சூழல் மாசுபடுவதும், பவளப் பாறைகள் அழிக்கப்படுவதும், கடல்நீர் மட்டம் அதிகரிப்பது போன்ற காரணங்களால் கரையோரங்களில் சுனாமி போன்ற பேரழிவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

இந்து சமுத்திரப் பகுதியை பெரிதும் நாசப்படுத்திய சுனாமி போன்ற பேரழிவுகளை தாங்கி நிற்கும் திறன் உலகில் ஒருசில கடலோர சூழலுக்குத்தான் உள்ளது. கடலோர பாதுகாப்பில் சதுப்பு நிலக்காடுகளும், பவளப் பாறைகளும் முக்கிய பங்காற்றுகின்றன. மனிதர்கள் திட்டமில்லாமல் செயற்பட்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்றனர். இதனால் பூமிப்பந்து வெப்பமடைகிறது. கடலோர பாதுகாப்பில் திட்டமின்றி செயல்படுவதால் அவற்றுக்கு எதிர்காலத்தில் பேராபத்து காத்திருக்கிறது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உலகில் முன்னணியாகத் திகழும் 'கிரீன் பீஸ்' அமைப்பின் நிபுணர் பிரட் ஸ்மித் கூறுகையில், உலகின் பல நாடுகளின் கடற்கரைக்கு அபாயம் நிலவுகிறது. புதிய வீதிகள் அமைப்பது, இறால் பண்ணைகளின் பெருக்கம், சுற்றுலா மற்றும் தொடர்ச்சியான விரிவாக்கத் திட்டங்கள் பல ஆசிய நாடுகளின் கடலோர பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளன என்கிறார்.

பூமியில் அடிக்கடி பற்றி எரியும் தீ காற்று மண்டலத்தை மாசுபடுத்துகிறது. பூமிப்பந்தும் வெப்பமடைகிறது. இதனால் கடலில் அடிக்கடி புயல் அபாயம் ஏற்பட்டு கடல் நீர் மட்டம் உயருகிறது. இது கடற்கரை பகுதியில் மிகுந்த அரிப்பை ஏற்படுத்துகிறது.

பூமிப் பந்து வெப்பமடைவதால் உருவாகும் அபாயம் குறித்து, தீவு நாடுகளின் தலைவர்கள் வரும் ஜனவரி 10 முதல் 14 வரை மொரீஷியஸ் தீவில் ஆலோசனை நடத்த இருக்கின்றனர். 20 ஆம் நூற்றாண்டில் சராசரியாக ஆண்டுக்கு முக்கால் அடி கடல் மட்டம் உயர்ந்து வருவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. பருவநிலை மாறுபாடு குறித்த ஐ.நா.சபையின் நிபுணர் குழு அடுத்த நூற்றாண்டில் கடல் மட்டம் இன்னும் வேகமாக உயரும் என்று மதிப்பிட்டுள்ளனர்.

இதனால், மாலை தீவு போன்ற நாடுகள் சுனாமி தாக்குதலில் கடலில் மூழ்கி காணாமல் போகும் அபாயம் அதிகரித்துள்ளது. அங்கு கடல் மட்டத்திற்கு மேல் 6 அடி உயரத்தில்தான் தீவு இருக்கிறது. பங்களாதேஷில் 17 லட்சம் மக்கள் கடல் மட்டத்திற்கு மூன்று அடி உயரமான நிலப்பரப்பில் தான் வசிக்கின்றனர். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலும் இதே நிலைதான்.

பருவநிலைத் தாக்கம் குறித்த ஜேர்மன் ஆய்வாளர் ரிச்சர்ட் கிளெய்ன் கூறியதாவது,

பேரழிவு அபாயங்களும் வறுமையும் கை கோர்த்து செல்கின்றன. சுற்றுச் சூழல் பாதுகாப்பின் சமூக பரிமாணம் மிகவும் பலவீனமாக உள்ளது. வளரும் நிலையில் உள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கு புயல் அபாயம் முதல் சுனாமியின் பேரழிவுவரை எச்சரிக்கை செய்ய தனி அமைப்பு தேவை.

கடல் நீர் மட்டம் உயர்வதால் தீவு நாடுகள் எதிர்காலத்தில் கடலில் மூழ்கும் அபாயம் இருக்கிறது. அங்கு நிலத்தடி நீரில் உப்புத் தன்மை அதிகரித்து குடிநீர் பஞ்சம் தலை தூக்கும் என்பது அதைவிட அபாயகரமானது. ஏரி நீரில் உப்பு நீர் கலந்து விஷத்தன்மை அதிகரிக்கும். உப்பு நீரை சுத்திகரிக்கும் கருவிகளின் விலை மிகவும் அதிகரிக்கும்.

இவ்வாறு ரிச்சாட் கிளெய்ன் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிவாரணப் பொருள் வழங்கல் விசேட செயலணிக்குழுவால் நடைமுறைகள் அறிவிப்பு!

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணிகளை துரிதமாக மேற் கொள்வதற்காக புலிகளால் அமைக கப்பட்ட விசேட செயலணி - நிவாரணப் பொருட்களை வழங்குவது தொடர்பாக சில முடிவுகளை எடுத்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இயங்கும் இந்த விசேட செயலணிக்குழு எடுத்துள்ள முடிவுகள் வருமாறு.

1.சமைத்த உணவுப்பொருள் வழங்குவதால் ஏற்படக்கூடிய சுகாதாரக் குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு சமைத்த உணவுப் பொருட களை மற்றும் பொதிகளைச் சேகரித்தல் நிறுத்தப்படல் வேண்டும்.

2.ஏனைய நிவாரணப் பொருள் விநியோகம் மையப்படுத்தப்பட்ட செயலணியூடாக ஒழுங்குபடுத்தப் பட்டு இணைக்கப்படவேண்டும்.

3.நிவாரணப் பொருள் விநியோகம், சேகரிப்பு என்பன பின்வரும் அடிப்படைகளில் வகைப்படுத்தப் படும்.

உலர் உணவுப்பொருட்கள்

அத்தியாவசிய சுகாதார மற்றும் மருந்து, குடிநீர் பொருட்கள், குழந்தைகளுக்கான பாவனைப் பொருட்கள்

படுக்கை, உடுப்பு, நுளம்புவலை, ஏனையபொருட்கள்.

கூடார விரிப்பு, தற்காலிக கொட்டகை வட்டுப்பாவனைப் பொருட்கள்.

மலசலகூட கட்டுமானப் பொருட்கள், குடிநீர் சேகரிப்புத் தாங்கிகள், பாரிய சமையற் பாத்திரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள்.

வைத்திய, மருத்துவப் பொருட்கள்.

4.சகல நிவாரணப் பொருட்களும் செயலணியினால் நெறிப் படுத்தப்படும் மத்திய நிலையங்கள் ஊடாகவே நெறிப்படுத்தப்பட்டு வழங்கப்படும்.

நிலையம் 1

முல்லைத்தீவுப் பகுதிகளுக் கான பணிகளை முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகிலுள்ள மின்வாரியத்தின் வளாகத்தில் இயங்கும். இதற்குப் பொறுப்பாக ஈழமாறன் செயற்படுவார்.

நிலையம் 2

வடமராட்சிப் பிரதேசத்திற்கான பணிகளை புதுக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள இணைப்பு அலுவலகம் மேற்கொள்ளும். இதன் பொறுப்பாளராக சுடர்மணி செயற் படுவார்.

5.இந்தத் தொடர்பு இணைப்பாளர்களின் செயற்பாடுகள்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புள்ளிவிபரங்களை சேகரித்த அறிக்கையிடல்.

மக்களுக்கான நிவாரணத் தேவைகளைத் தொகுத்து அறிக்கையிடல்.

நிவாரணப் பொருட்களை சேகரித்தலும் பற்றுச்சீட்டுக்களை வழங்குதலும்.

பெறப்பட்ட நிவாரணப் பொருட்களை உடனுக்குடன் பயனாளிகளுக்கு வழங்குதல்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்யும் பத்திரிகையாளர்கள். அரசசார்பற்ற நிறுவனங்களும் வழிகாட்டும் நிலையமாக செயற்படல்.

உடனுக்குடன் களநிலை மற்றும் நிவாரணப் பணி தொடர்பான அறிக்கையினை திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்திற்கும் மாவட்ட மட்டசெயலணிக் குழுவிற்கும் அனுப்புதல்.

6.மருத்துவப் பொருட்களை சுகாதார சேவை நடுவப்பணியகம், கிளிநொச்சி அல்லது மாவட்ட சுகாதாரசேவைப் பணிமனைக்கு அனுப்புதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் டியூ குணசேகர யாழ். மாவட்டத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மக்களில் முக் கியமாக யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கப் படும் என்பதை தான் உறுதிப்படுத் துவதாக அரசமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜ யத்தை மேற்கொண்டு அமைச்சர் டியூ குணசேகர தாளையடி, செம் பியன்பற்று, பருத்தித்துறை போன்ற பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து கலந்துரை யாடினார்.

இதைத் தொடர்ந்து யாழ். செயல கத்துக்கு வருகைதந்த அவர்- யாழ். மாவட்ட அரச அதிகாரிகளையும், பொது அமைப்பு பிரதிநிதிகளையும் சந்தித்தபோதே இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரி வித்த அவர்- இயற்கை அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட யாழ்.மக்களை உடன்சென்று பார்வையிட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கூறியதற்கு அமையவே நான் இங்கு வருகைதந்து இருக்கி றேன். சம்பவம் நடைபெற்ற இடங்க ளையும், மக்களையும் நேரில் சென்று பார்வையிட்டு கலந்துரையாடினேன்.

இதன்மூலம் அவர்களது உட னடித் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை உணரமுடிகிறது. தமிழர்கள் என்ற பாகுபாடு எம்மிடம் இல்லை. நாம் அவர்களுக்கு முன் னுரிமை அடிப்படையில் உதவி செய்வோம் என்பதை உறுதியளிக் கிறேன்.

எனது ஆய்வுகள் தொடர்பாக வும் அரச உயரதிகாரிகள், பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்ட விடயங்களையும் அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள் ளேன் என அவர் மேலும் தெரிவித் தார்.

இந்த சந்திப்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக அலுவ லர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவ நேசன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## அரச ஊழியர்களின்...

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் பயிற்சியிலுள்ள சகல பட்டதாரி பயிலுநர்களின் இணைப் பாளர்களும், அவர்கள் நெறிப்படுத் தும் பயிற்சி நிலையத்தில் பயிலும் பட்டதாரி பயிலுநர்களையும் அவ் வப்பகுதி பிரதேச சபைகள் அல் லது செயலகங்களில் சமுக மளித்து அங்கு தேவைப்படும் நிவா ரண தேவைகளுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் பணித்துள்ளார்.

இதேவேளை, பட்டதாரிகளை பயிற்சிகளுக்காக அமைச்சுகளுக் கும், மாகாண சபைகளுக்கும் இணைக்கும் நடைமுறை ஜனவரி மாத இறுதிவரைக்கும் பிற்போடப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட் டது.

## துயரத்தில் துடிக்கும்...

இலங்கைத் தீவில், யாழ்ப்பாணத்திலிருந்து காலி வரையான கடலோரம், குறிப்பாக எமது தாயகப் பகுதிகள் இயற்கையின் கோரத்தாண்டவத்திற்கு இலக்காகி பாரிய உயிரழிவையும், பொருளழிவையும் சந்தித் துள்ளன. கடலெழுச்சியின் இந்த அனர்த்த மானது கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்த போரினால் சிதைந்து போன எமது தேசத்தையும், நலிந்துபோன எமது மக்களையும் மிகவும் மோசமாகப் பாதித் துள்ளது.

இந்த இயற்கையின் அழிவில் இரத்த உறவுகளையும், அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து, ஆற்றமுடியாத துயரத்திலும், வேதனையிலும் துடிக்கின்ற எமது மக்களுக்கு எனது அன்பையும், ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின் றேன். அதுபோலவே தமிழ்பேசும் தாயக மண் ணிலும், தென்னிலங்கைக் கடலோரப் பகுதியி லும் தமது உற்றார், உறவினரைப் பலிகொடுத்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய, சிங்கள சகோ தரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

அத்துடன் தென்னாசிய நாடுகளிலும், இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் உயிரிழப்புக்களைச் சந்தித்துத் துயருறும் மக்களின் சோகவுணர்விலும் பங்குகொண்டு ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றேன்.

இந்த நிலவதிர்வுப் பேரலைகள் எமது மண்ணில் நிகழ்த்திய பேரழிவில் பல்லாயிரக் கணக்கான எம்மக்களது உயிரைப் பலியெ டுத்து பல ஆயிரம் பேரைக் காயப்படுத்திய தோடு மட்டும் நின்றுவிடவில்லை. பல கரை யோரக் கிராமங்களையும், பல கரையோர நகரங்களையும் அடியோடு அழித்து எம் மக் களின் கடல் சார்ந்த பொருளாதார வாழ்வை நாசப்படுத்தியிருக்கிறது. பல குடும்பங்களை மொத்தமாக அழித்து எம்மக்களது சமூக வாழ்வைச் சிதைத்திருக்கிறது. பல்லாயிரம் மக்க ளது வாழ்விடங்களை அழித்து அவர்களது எதிர் காலத்தை மோசமாகப் பாதித்திருக்கிறது.

இப்படியாகப் பேரழிவைச் சந்தித்து, பெரும் துயரத்தில் வாழும் எம்மக்களுக்கு — எமது விடுதலை அமைப்பும், தமிழர் புனர்வாழ் வுக் கழகமும் ஏனைய அரசசார்பற்ற நிறுவ னங்களும் பல்வேறு மக்கள் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து உதவி நடவடிக்கைக ளையும், மனிதாபிமானப் பணிகளையும் முழு அளவில் மேற்கொண்டுவருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு வலுவூட்டு கின்ற வகையிலும், பாதிப்புற்றுள்ள மக்க ளுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலும் தாமாகவே முன்வந்து, தாராளமாக உதவி வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது உறவு களுக்கு இந்நேரத்தில் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்மக்களை இப்பேரழிவிலிருந்து மீட் கத் தொடர்ந்தும் உதவவேண்டும் எனவும் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு பாதிப்புற்றுள்ள எம்மக்களுக் குத் தாராளமாக உதவுமாறு உலக நாடு களையும், ஐ.நாவின் அமைப்புக்களையும் வேண்டிக்கொள்கின்றேன்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரத்தியேக மனிதாபிமான உதவிக்குழு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிர தேசங்களில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவா ரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி பிரத்தியேக மனிதாபிமான உதவிக் குழுவினை நியமித்துள்ளார்.

இந்தக குழுவிற்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் தலைமை தாங்குகின்றார். இந்தப் பிரதேசங் களுக்கு நிவாரணப் பணியாளர் களும் அனுப்பப்பட்டுள்ளனர்.

## 22375 சடலங்கள்...

யாவில் 140 பேர், கிளிநொச்சியில் 147 பேர் என்ற அடிப்படையில் சட லங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேசமயம் இக்கடற் கொந் தளிப்பு காரணமாக 80602 பேர் காயமடைந்துள்ள அதேசமயம் 8593 பேர் காணாமற்போயுள்ளனர். இந்த அனர்த்தம் காரணமாக 84579 குடும்பங்களைச் சேர்ந்த ஏழு லட் சம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கூடுதலானோர் அம் பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்க ளென்றும் சமூக சேவைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## சேதமுற்ற...

நிலைமைகளை மதிப்பீடு செய்தார்.

இதேவேளை - இந்த இயற்கை அனர்த்தத்தால் கடற்படையினர் தப்பில் 17 பேர் பலியானதாகவும் 52-பேர் காயமுற்றதாகவும், ஒருவ ரைக் காணவில்லை என்றும் கடற் படைத் தலைமையகம் நேற்றுக் காலை தெரிவித்தது.

பலியானவர்களில் லெப். கொமாண்டர் எம்.எஸ்.கே.டிசில்வா, லெப்.ஜெயவிலால் ஆகிய அதிகாரி களும் அடங்குகின்றனர். கடற்படை யின் பராக்கிரமபாகு கப்பல் உட்பட பல படகுகள கடலில் மூழ்கிவிட்ட தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிவாரண...

மாறு போர்நிறுத்த கண்காணிப்புக் குழு மூலம் விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கமைய இக்குழுவில் விடுதலைப்புலிகள் அங்கத்துவம் வகிப்பதன் மூலம் மாவட்ட ரீதியாக அமைக்கப்படும் குழுவில் அங்கத்து வம் வகிக்கமுடியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு தகுந்தநிலையில் அரசு புனரமைப்பு பணிகளை மேற்கொள் ளும் என அவர் மேலும் தெரிவித் தார்.

## நிவாரணப்பணிகளுக்கு வசதியாக சோதனைச்சாவடிகள் இரவு பகல் திறந்திருக்கும்

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு வசதி யாக இராணுவ சோதனைச் சாவடி கள் 24 மணிநேரமும் திறந்திருக்கு மென இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபனம் அறிவித்துள் ளது.

இது தொடர்பாக மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது -

இது தொடர்பாக அரசாங்க சமாதான செயலகம் போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுமூலம் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துடன் தொடர்புகொண் டுள்ளது.

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால விடு தலைப் புலிகளின் சமாதான செய லகப் பணிப்பாளர் புலித்தேவனைத் தொடர்புகொண்டு தேவைப்படும் அவசர உதவிகள் பற்றி கேட்டறிந் துள்ளார்.

நிவாரணங்களை விரைவாகவும் ஒழுங்காகவும் வழங்குவதற்கு ஸ்தா பிக்கப்பட்டுள்ள உயர்மட்டக்குழு வின் கூட்டங்களில் பங்கேற்குமாறு விடுதலைப் புலிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலி கள் அபிவிருத்தி செயலகம் விடுத் துள்ள கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி செய லகம் தெரிவித்துள்ளது.

### மேலும் 5 சடலங்கள் திருமலையில் கரையொதுங்கின

கடற்கொந்தளிப்பின்போது அள் ளிச்செல்லப்பட்ட மேலும் 5 சட[illegible] கள் திருகோணமலை மாவட்[illegible] தில் கரையொதுங்கிவுள்ளது.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் கரையொதுங்கிய 2 சட லங்களும், சாம்பல்தீவில் கரையொ துங்கிய 2 சடலங்களுமே மீட்கப்பட் டது.

பொலிஸாரினால் மீட்கப்பட்டு மேற்படி ஐந்து சடலங்களும் உருக் குலைந்த நிலையில் திருகோண மலை வைத்தியசாலையில் அனுப்பி வைக்கப்பட்டன. விசாரணைகளின் பின்னர் அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி நடராசா

இராணி மகால் இல,47, நொத்தாரிஸ் லேன், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளையதம்பி நடராசா 29.12.2004 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பூரணம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, மாணிக்கம் மற்றும் இராசையா, சரஸ்வதியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் -

காலஞ்சென்றவர்களான மாணிக்கம், மகேசன் மற்றும் சோதிமலர், சின்னையா (விற்பனைத் திணைக்கள ஓய்வுபெற்ற ஊழியர்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராமநாதன், ஜெயராணி, யோகநாதன் (பொன்னர்), விமலநாதன் (செல்வம்) (சீமெந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தீர்த்தராசா, அன்னலட்சுமி, செல்வராணி (மதி), தயாபரி (கட்டி), காலஞ்சென்ற செல்வரட்ணம் பரிமளசிங்கம் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா) இராசரட்ணம் (கிளி - ஜேர்மன்), சிறீதரன் (சுதா - சுவிஸ்), ஸ்ரீரங்கன், திருமாறன் (சுவிஸ்), திருமலர் (லண்டன்), திருமாவளவன் (சுவிஸ்), திருமகள் (சாந்தி - ஜேர்மனி), திருவளர்செல்வி (ஜேர்மனி), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று 30.12.2004 வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனக் கிரிகைகள் நடைபெறும்.

'இராணிமகால்'
*47, நொத்தாரிஸ் லேன்,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.* (1013)

தகவல்,
குடும்பத்தினர்.

பண்டிகைக்கால விசேட சலுகை
வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கு
5/= மட்டுமே
மேலும் தொடர்ச்சியான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கான எமது அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
இந்தியா 20.00
திருமுருகன் கொம்நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org